ஆண்டு அறிக்கை

2015

இலங்கை போக்குவரத்துச் சபை

உள்ளடக்கம்

01. தொலைநோக்கு, பணி, இலக்குகளும் குறிக்கோள்களும்

02. அறிமுகம்

03. தலைவரின் செய்தி

04. செயற்திறன்

05. இறுதிக் கணக்குகள்

06. கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

தொலை நோக்கு

பிராந்தியத்தின் அதி சிறந்த பயணிப் போக்குவரத்தாளர்

பணி

பொது மக்களுக்கு பாதுகாப்பான நம்பத்தகுந்த வசதியுள்ள வீதிப் பயணிப் போக்குவரத்துச் சேவையை நியாயமான கட்டண முறையின் கீழ் சேவை அர்ப்பணிப்புடன் செயலாற்றும் உற்பத்தி வளமிக்க பணியாளரின் மூலம் சகல வளங்களையும் உச்ச நிலையில் பயன்படுத்தி பெற்றுக் கொடுத்து பொருளாதார ரீதியில் சமநிலையை பேணும் நிறுவனமாக இயங்கல்.

இலக்குகளும் குறிக்கோள்களும்

1. 12 பிராந்திய அலுவலகங்கள் மூலம் சிறந்த தரமுடைய பயனுடைய பஸ் சேவைகளை ஊக்குவித்து அவற்றை கண்காணித்து இணைத்து ஆலோசனை வழங்குதல்.

2. பாடசாலை செல்லும் சிறார்களுக்கு திருப்திகரமான பஸ் சேவைகளை அளித்தல்.

3. பண நோக்கங்களுக்காக தனியார் துறையினரால் செயலாற்றப்படாமல் அசட்டை செய்யப்பட்டுள்ள வருவாய் அற்ற பாதைகளில் பஸ் சேவைகளை அளித்தல்.

4. புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்தில் இருந்து தூர இடங்களுக்கு பஸ் சேவைகளை அளித்தல்.

5. பொது தனியார் துறை போக்குவரத்து முகவர் நிலையங்களை இணைத்தல்.

6. விழாக்கள், விசேட வைபவங்கள், பாராளுமன்ற, மாகாண சபைத் தேர்தல்கள், முதலிய தேவைகளுக்கு பஸ் சேவைகளை இணைத்தல்.

7. தபால்களையும் பத்திரிகைகளையும் பஸ்களில் ஏற்றிச் செல்லல்.

8. பஸ் செயலாற்றலுக்காக பொது திறைசேரி தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, மாகாண சபைகள், உரிய அமைச்சுகள் அத்துடன் இதர தொடர்புடைய முகவர் நிலையங்கள் ஆகியவற்றுக்கும் பிராந்திய அலுவலகங்களுக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்தல்

9. இ.போ.ச சாரதிப் பயிற்சி பாடசாலைகளில் இருந்து நன்கு பயிற்றப்பட்ட ஒழுக்காற்றுடைய சாரதிகளை அளித்தல்.

10. சாரதிகளுக்கும் நடாத்துநர்களுக்கும் பொறிவலர்களுக்கும் மேற்பார்வை பணியாளர்களுக்கும் கருத்தரங்குகள், தொழிற் பாசறைகள் ஆகியவற்றை நடாத்துதல்.

11. பிராந்திய வேலைக்களங்களால் உற்பத்தி செய்யப்படும் அலகுகள் துணை அலகுகள் ஆகியவற்றை சாலைகளுக்கு அளித்தல்.

12. வயது வந்தோர்க்கும் பாடசாலை மாணவர்களுக்கும் கவர்ச்சிகரமான கழிவு விகிதங்களில் பருவகால சீட்டுக்களை அளித்தல்

13. முக்கியமான மாற்று உறுப்புக்களை மாகாண வேலைக்களங்களுக்கு விநியோகிப்பதற்காக நாரேஹேன்பிட்டியில் உள்ள இ.போ.ச தலைமையகத்தில இடப்பெயர்ச்சி களஞ்சியம் ஒன்றை பேணல்.

14. சாலைகளில் பாதுகாப்பு புலனாய்வுகளையும் திடீர் பரிசோதனைக் குழு செவ்வைபார்த்தல்முதலியவற்றையும்நடாத்துதல்.

அறிமுகம்

நாட்டின் பொருளாதார வளரச்சிக்கு போக்குவரத்தின் எல்லா அம்சங்களும் அவசியமானது என்பதில் ஐயத்திற்கு இடமில்லை. இக்கூற்று வீதிப் பயணப் போக்குவரத்துக்கும் விதிவிலக்கல்ல. இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாட்டில் கிராமங்களையும் நகரங்களையும் அதன் மூலம் முழு நாட்டையுமே இணைக்கும் முக்கிய பாத்திரத்தை பஸ் வண்டி வகிக்கிறது.

1957.10.31 ஆம் திகதி 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து அதிகார சட்டத்தின் பிரகாரம் நாடு முழுவதும் 80 பஸ் செயலாற்றுனர்களால் மொத்தமாக 1200 பாதைகளில் செயலாற்றப்பட்ட 3532 பதிவு செய்த பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டன. இதன் விளைவாக 1958.01.01 முதல் இலங்கை போக்குவரத்து சபை உருவாகியது.

அன்று முதல் 1977 ஆம் ஆண்டு வரை இ.போ.ச வீதிப் பயணப் போக்குவரத்தில் ஏக போக உரிமையை கொண்டிருந்தது. 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க போக்குவரத்து சட்டத்தின் மூலம் இ.போ.சபையுடன் இணைக்கப்பட்ட 10 பிராந்திய போக்குவரத்துச் சபைகள் 1978 ஆம் ஆண்டு இ.போ.ச வை பன்முகப்படுத்தியன் மூலம் உருவானது. சிறிய அளவிலான அலகுகள் உள்ளூர் பிராந்திய தேவைகளுக்கும் உள்ளூர் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கும் விரைவான தீர்வு கண்டு பயணம் செய்யும் பொது மக்களுக்கு வினைத்திறனுடைய பயனுள்ள விளைவுகளை இ.போ.ச பன்முகப்படுத்துவதன் மூலம் அடையலாம் என அரசு கருதியது.

ஆயினும் இ.போ.ச தொடர்ந்து பெருவாரியான நட்டத்தில் இயங்கியமையினாலும் பொருளாதாரம் சுதந்திரமயமாக்கப்படல் வேண்டும் என்ற நவீன எண்ணக்கருவினால் உருவாகிய பயணத் தேவையை பூர்த்தி செய்ய முடியாமையாலும் வீதிப் பயணிப் போக்குவரத்துக்கு தனியார் துறையை அனுமதிப்பது என முடிவு செய்யப்பட்டது.

பொதுத் துறையை மீள அமைக்கும் பணியில் ஒரு பகுதியாக இ.போ.ச மக்கள் மயமாக்கப்படுவதற்கென அடையாளம் காணப்பட்டது. அரசு தனியார்மயப்படுத்தலில் உறுதியான நம்பிக்கை வைத்திருந்தமையினால் இம்மாற்றம் அரச கூட்டுத்தாபனங்களை அதாவது அரச உடைமையாக்கப்பட்ட வியாபார முயற்சிகளை பொது கம்பனிகளாக மாற்றும் 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அதிகார சட்டத்தின் கீழ் இடம் பெற்றது.

மக்கள் மயப்படுத்தலின் போது இயங்கிய 93 போக்குவரத்து சாலைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறான வரையறுக்கப்பட்ட கம்பனிகளாயின. ஊழியர் மத்தியில் கம்பனியின் மொத்தப் பங்குத் தொகையின் அரைவாசி விநியோகிக்கப்பட்டு மீதிப் பகுதியை பொதுத் திறைசேரி வைத்திருந்தது. பெரும்பாலும் ஊழியர் மத்தியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் சபை இக்கம்பனிகளின் நிருவாகத்தை நடாத்தியது. மக்கள் மயமாக்கல் ஏனோ தானோ என்ற முறையில் செயற்படுத்தப் பட்டமையினால் விரும்பிய விளைவுகளை அடைய முடியவில்லை.

எனவே 1977 ஆம் ஆண்டு 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தின் திருத்தம் மூலம் பஸ்கம்பனிகள் 11 கொத்தணி பஸ் கம்பனிகளாக மாற்றப்பட்டன. கொத்தணி பஸ்கம்பனிகளாலும் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. அதிக பணியாளர், ஒழுக்காற்றில் பெருவீழ்ச்சி, நியாயமற்ற போட்டி, சமூகக் கடப்பாடுகள், தொழில் முறைமையின்மை, வினைத்திறன் இன்மை, செயலாற்று செலவுகளில் உயர்ச்சி, அரசியல் தொழிற்சங்க முறையற்ற தலையீடு, கட்டுமீறிய ஊழல் ஆகியன கொத்தணி பஸ்கம்பனிகளில் நிலவிய சில பிரச்சினைகள் ஆகும்.

மேற்குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வை காணும் பொருட்டு 2005 ஆம் ஆண்டு 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் 2005.10.19 ஆம் திகதி முதல் இலங்கை போக்குவரத்து சபை தாபிக்கப்பட்டது.

தலைவரின் செய்தி

இலங்கை போக்குவரத்துச் சபையின் (இ.போ.ச) முன்னோக்கிய பயணத்தில் தீர்க்கமான வழிமுறைகளை மேற்கொண்ட ஆண்டாக 2015 ஆம் ஆண்டைக் குறிப்பிடலாம். இவ்வாண்டில் இ.போ.சபையின் செயலாற்றல் திருப்பதிகரமான மட்டத்தில் இருந்ததென்பது மகிழ்ச்சியளிப்பதாகவுள்ளது.

பஸ் அணிக்கு புதிய பஸ்கள் சேர்க்கப்பட்டு இ.போ.ச பஸ்கள் செயலாற்றிய மொத்த மைற் தொகை 18.6% ஆல் 440 மில்லியன் கிலோ மீட்டராக அதிகரித்தது. மொத்த பயணி கிலோ மீற்றர் தொகையும் 19.6% ஆல் 15.2 பில்லியன் கிலோ மீட்டராக உயர்ந்தது.

இ.போ.ச நாளொன்றுக்கு செயலாற்றும் பஸ்களின் சராசரி எண்ணிக்கை 1044 ஆல் 5270 ஆக உயரந்தது. இ.போ.சபையின் சராசரி பஸ் அணியை பாவிக்க முடியாதலால் பஸ்கள் இவ்வாண்டில் கைதவிர்க்கப்பட்ட போதும் 1639 ஆல் 8047 ஆக உயரந்தது. பஸ் அணி உயர்வதற்கு முக்கிய காரணம் பொதுச் திறைசேரியின் நிதியுதவியுடன் பெறப்பட்ட 2200 புதிய பஸ்களின் மீதி பஸ்கள் இவ்வாண்டில் கிடைத்தமையாகும். இவ்றறில் 1319 பஸகள் 2014 ஆம் ஆண்டில் இறுதியில் கிடைத்தன. கிராமிய வீதிகளில் செயலாற்றுவதற்கான 80 சிறிய பஸ்களும் இத்தொகையில் அடங்கும்.

கிரமமான, அரை சொகுசு பஸ்களுடன் அதி சொகுசு பஸ்களின் எண்ணிக்கையும் செயலாற்றுமிடங்களும் விரிவடைந்தன.

இம்முன்னேற்றங்கள் இருப்பினும், இ.போ.சபையின் செயலாற்றல் செலவு குறிப்பிடத்தக்களவு இவ்வாண்டில் உயர்வடைந்தது. இதற்கு முக்கிய காரணம் ஊழியர்களின் சம்பளம் உயர்வுகளும் புதிய ஆட்சேர்ப்புமாகும். இவ்வாண்டில் இ.போ.சபையின் மொத்த வருவாய் 6.4% ஆல் 35.8 பில்லியன் ரூபாவாக உயர்ந்தது. ஆயினும் செயலாற்றல் செலவு 14.1% ஆல் 40.6 பில்லியன் ரூபாவாக உயர்ந்த்து. இதனால் செயலாற்றல் நட்டம் இவ்வாண்டில் 4.7 பில்லியன் ரூபாவாகும். 2014 ஆம் ஆண்டில் நட்டம் 1.9 பில்லியன் ரூபாவாக இருந்தது.

பாதுகாப்பான, சிக்கனமான, நம்பிக்கையுள்ள போக்குவரத்து வசதிகளை பாடசாலைச் சிறார்கட்கும் பெற்றோருக்கும் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் செயற்படுத்தப்பட்ட சிசு சறிய திட்டத்தின் கீழ் 1255 பஸ்கள் செயலாற்றப்பட்டன. பிந்திய இரவு வேலளகளிலும் விடியற்காலையிலும் பாதுகாப்பான சேவையை அளிப்பதற்காக செயற்படுத்தப்படும் நிசி சறிய திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் 134 பஸ் சேவைகள் நடாத்தப்பட்டன.

2015 மார்ச் 23 ஆம் திகதி இரண்டாவது தடவையாக நான் இ.போ.ச பதவியைப் பொறுப்பேற்றேன். முதற் தடவையில் 1994 முதல் 2001 வரை இ.போ.ச தலைவராக பதவி வகித்தேன். இ.போ.ச வை செயல் நிறைவு செய்யக்கூடிய ஒரு நிறுவகமாக ஆக்க வேண்டுமென்பதே எனது பிரதான குறிக்கோளாகும். முதற் தடவையில் அதற்கான காலம் கனிந்து வரும்போது ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் எனது பதவியைத் துறக்க நேரிட்டது.

ஆயினும் இம் முறை எனது கனவு நிட்சயம் நனவாகும் என்பது எனக்கு மகிழ்வூட்டும் விடயமாகும்.

2015 ஆம் ஆண்டு நான் பதவியேற்றபோது இ.போ.ச சாலைகள் பல ஊழியர்கள் மாதாந்த சம்பளங்களை வழங்க முடியாது திண்டாடியது. நியதிச் சட்ட முறையான உழியர் சேமலாப நிதி, பணிக்கொடை ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய நிலுவைகள் பல பில்லியன் ரூபாக்களை தாண்டியிருந்தது. ஆயினும் இவற்றைச் செலுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. எதிர்வரும் ஆண்டுகளில் செயல் நிறைவான நிறுவகமாக இ.போ.ச பரிணமிக்கும் என்பது எனது நம்பிக்கையும் பிரார்த்தனையுமாகும்.

நான் சாதிக்க முடிந்ததெல்லாவற்றிற்கும் முக்கிய காரணம் மாண்புமிகு போக்குவரத்து, சிவில் விமான சேவைகள் அமைச்சரின் தளம்பலற்ற ஆதரவும் உதவியுமாகும். அது போன்று போக்குவரத்து அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சின் அலுவலர்கள், திறைசேரி, SEMA நிறுவக அலுவலர்களும் ஏனைய நிறுவகங்களும் இ.போ.சபைக்கு ஆற்றிய உதவிகளை இங்கு பதிவு செய்தேயாக வேண்டும்.

இ.போ.ச ஊழியர் அணி துணிவுடனும் பலத்துடனும் மேலும் முன்னேறி, பெற்றுக் கொண்ட வெற்றிகளை உறுதிப்படுத்துவதோடு மேலும் பல வெற்றிகளை ஈட்டிக் குவித்து தேசத்தின் பயணபங்காளியாக இ.போ.ச விளங்கும் என்பது எனது வேண்டுகோளும் நம்பிக்கையுமாகும்.

றமல் சிறிவர்த்தன
தலைவர்
இலங்கை போக்குவரத்து சபை

செயலாற்றுப் பகுதி

பஸ் செயலாற்றலில் ஈட்டிய முன்னேற்றம்

2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் நாளாந்த செயலாற்றலுக்கு விடுவிக்கப்படும் பஸ்களின் எண்ணிக்கை உயரந்துள்ளது. அதற்கான முக்கிய காரணம் 2200 புதிய பஸ்களை திறைசேரியின் உதவியுடன் இ.போ.ச கொள்வனவு செய்தமையாகும்.

இந்நிலையில் மாதாந்தம் செயலாற்றிய கி.மீ தொகையை 29 மில்லியனிலிருந்து 39 மில்லியன் அளவு வரை உயர்த்த முடிந்தது. இவ்வாண்டினிறுதியில் இம் மட்டத்தை மேலும் உயர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த ஆண்டில் நாளாந்த வழிப்பட்டியல் வருவாய் சராசரி 60 மில்லியன் ரூபா அளவில் இருநத்து. 2015 ஆம் அண்டில் இத் தொகை 65 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது.

- மும் மொழிகளிலும் சேரிடங்காட்டும் பலகைகள் 2200 பஸ்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், நாடு பூராவும் பரந்துள்ள பிரதேசங்களுக்குப் பொருந்தக் கூடியவாறு சேரிடங்காட்டும் பலகைகளை அறிமுகப் படுத்தும் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் செயற்படுத்துவதன் மூலம் தேசிய மொழிக் கொள்கை உறுதிப்படுத்தப்படுவதுடன் அதே போன்று சமூக சகவாழ்வுக்கான சந்தரப்பமும் உருவாகுமாதலால் எதிர்காலத்தில் கொள்வனவு செய்யப்படவிருக்கும் சகல பஸ்கட்கும் இத்திட்டத்தின் கீழ் மும் மொழிகளிலும் சேரிடம் காட்டும் பலகைகள் பொருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- இரவு இறுதிப் பயணங்களைத் தொடச்சியாக செயலாற்றும் திட்டத்தின் கீழ் புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்திலிருந்து இருவு 10.00 மணிக்கு பஸ் சேவைகள் தொடங்குவதுடன், 30 பயணச் சேரிடங்கட்கு இப்பஸ்கள் செயலாற்றப்படுகின்றன.

- இ.போ. சபையும் புகையிரத திணைக்களமும் இணைந்து ஆற்றும் ஒருங்கிணைந்த சேவையை மேலும் அபிவிருத்தி செய்யு முகமாக தெல்கொடை, கழுத்துறை, மொறட்டுவை, தெகிவளை, கொள்ளுப்பிட்டி போன்ற புகையிரத நிலையங்களிலிருந்து புகையிரத நிலையங்கட்கு வரும் பயணிகளின் போக்குவரத்து தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- GPRS வசதியைப் பயன்படுத்தி பஸ் செவ்வை பார்த்தல் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட 2200 பஸ்கட்கு GPRS வசதி பொருத்தப்பட்டுள்ளது. அதற்கேற்ப பஸ் சேவையாற்றும் இடம், எரிபொருள் நுகர்வு தொடர்பான விவரங்கள், பஸ்ஸிற்குள் உள்ள பயணிகள் தொடர்பான பயணிகளின் விவரங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்வதற்கு இயலும்.

- பாடசாலை சிறார்களின் பருவகாலச் சீட்டு கட்குப் பதிலாக இலத்திரனியல் சீட்டுகளை அறிமுகப்படுத்தல் கடந்த ஆண்டு தொடக்கப்பட்டு தற்போதும் நடைபெற்று வருகிறது.

- அநுராதபுரம் புனித நகரை மையமாகக் கொண்டு இ.போ.ச மூலம் விசேட பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், காலை, 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை 45 நிமிடங்கட் கொரு தடவை இச் சேவை நடைபெறுகிறது. இதற்கு 02 சாதாரண பஸ்களும் மற்றும் 02 சொகுசு பஸ்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

- 2014 ஆம் ஆண்டினிறுதியில் இ.போ. சபையிடம் உள்ள இலத்திரனியல் பயணச் சீட்டு இயந்திரங்களின் தொகை 2800 ஆகும். இத்தொகையை 3700 ஆக உயர்த்துவதற்கு தேவையான மேலும் 900 பயணச் சீட்டு இயந்திரங்கள் 2015 ஆம் ஆண்டின் முதல் 06 மாதத்திற்குள் கொள்வனவு செய்யப்பட்டன.

- இ.போ. சபையினால் அதி சொகுசு பஸ்கள் கொள்வனவு செய்யப்பட்டு தெற்கு, கட்டுநாயக அதிவேக பாதையில் செயலாற்றப்படுவதுடன் நகர்ப்புற சேவைகள் பலவற்றை ஆற்றுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதிவேக பாதையிலும் அதேபோன்று அதற்கு வெளியேயும் அதி சொகுசு பஸ் சேவைகளை தொடங்குவதற்கு இ.போ.ச விற்கு முடிந்தது. இப் பஸ்கட்கு தற்போது பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

- சிசு சறிய பாசாலை சேவைகள் திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டு முடிவில் 662 பஸ்கள் செயலாற்றப்பட்டிருப்பதுடன் 2015 ஆம் ஆண்டில் இத்தொகையை 750 ஆக உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<u>சமூக நன்மைக்கு இ.போ.ச வின் பங்களிப்பு</u>

- **விடியற்காலை முதல் பிந்திய இரவு கடைசி பயணங்கள் செயலாற்றல்.**
  இலங்கையின் பிரதேசங்கள் யாவும் அடங்கலாக விடியற்காலை முதல் பிந்திய இரவு கடைசிப் பயணங்களையும் சேவையாற்றுவதன் மூலம் நாட்டின் பொருளாதார பங்களிப்பிற்கு முதுகெலும்பாக விளங்குகிற பணியாளர்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றுவதில் இ.போ.ச ஆற்றும் சேவைகளினால் கடந்த காலங்களிலிருந்து அதற்கு ஏற்பட்ட நட்டம் சொல்லுந்தரமன்று. ஆயினும் இ.போ.ச சமூக பொறுப்பெனக் கருதி தொடர்ச்சியாக இச் சேவைகளையாற்றி வருகிறது.

- **கிராமிய பஸ் சேவை செயலாற்றல்**

  கிராம மக்களையும் அவர்களின் விளை பொருட்களையும் கிராமப்புறங்களிலிருந்து நகரிற்கு கொண்டு வரவும் மீளக் கொண்டு செல்லவும்

மற்றும் கிராம மக்களின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றுவதற்கும் பெரும்பாலும் இ.போ.ச பஸ்கள் பயன்படுத்தப்படுகின்றன. எனவே நகர் சேவைகளுடன் கிராமத்திலிருந்து நகரத்திற்கும், நகரத்திலிருந்து கிராமத்திற்கும் சேவையாற்ற வேண்டிய தேவை எமக்குள்ளது. ஆயினும் இச் சேவையில் இலாபம் கிட்டுவதில்லை. எனினும் அரச போக்குவரத்தாளர் என்ற ரீதியில் தொடர்ந்து நாம் இச் சேவையை நல்கி வருகிறோம்.

- **பாடசாலை சேவை பஸ் செயலாற்றல்**

இ.போ.ச தாங்குகின்ற பழு நாளைய எதிர்காலத்தில் சமூக பயன்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக அதிக, வருவாய் தரும் செயலாற்றல் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளாது, எம்மிடமுள்ள மட்டுப்படுத்தப்பட்ட பஸ் வண்டிகள் மூலம் எதிர்கால பரம்பரைக்கு இடமளிப்பதற்காக பாடசாலைக்குப் பிள்ளைகளை குறித்த நேரத்திற்குப் பாடசாலைகட்கு ஏற்றிச் செல்லுவதாலும், மீண்டும் வீட்டுக்குக் கொண்டு செல்வதாலும் இதன் மூலம் தேசிய செயலாற்றலில் இ.போ.ச ஈடுபட்டுள்ளது.

- **தேசிய விழாக் காலங்களில் நடைபெறுகின்ற பஸ் சேவைகள்**

சிங்கள, தமிழ், புத்தாண்டு விழா, வெசாக், பொசோன் விழா, கண்டி, கதிர்காம அசல பெரகெர விழா, சிவனொளிபாத மலை சேவை ஆகிய சமய முக்கியத்துவம் வாயந்த விழாக்களுக்கும் விசேட பஸ் சேவைகளை இ.போ.ச செயலாற்றி சமூக விருந்தோம்புனராக செயற்படுகிறது. இச்சேவைகளும் முற்றிலும் வருவாயை நோக்காக் கொண்டு நடாத்தப்படுபவையல்ல.

- **பருவகாலச் சீட்டு சேவை**

பாடசாலை, பல்கலைக்கழகங்கள், வயது வந்தோர் ஆகிய பல்வேறு மட்டத்தினரினதும் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இ.போ.ச மேற்கொள்ளும் நடவடிக்கை மூலம் நாட்டிலுள்ள பயணம் செய்யும் பொது மக்கட்கு பொருளாதார ரீதியாக நிவாரணம் கிட்டுகிறது. பழைய பருவகாலச் சீட்டுகட்கு பதிலாக நவீன தொழினுட்ப ரீதியான இலத்திரனியல் பருவகாலச் சீட்டுகளை அறிமுகப்படுத்தல் இ.போ.ச.வால் தொடங்கப்பட்டுள்ளதுடன் தற்போது கொழும்பு, கம்பஹா, கழுத்துறை, கதிர்காமம் ஆகிய பிரதேசங்களில் இது ஏற்கனவே உபயோகத்திலுள்ளது.

- **அதிவேக நெடுஞ்சாலைகளில் போக்குவரத்துச் சேவை**

  இலங்கையின் வீதி முறையில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அதிவேக நெடுஞ்சாலை முறைக்குள் செயலாற்றுவதற்கு விதந்துரைக்கப்பட்ட பஸ்களை ஈடுபடுத்துவதன் மூலம் பயணிப் போக்குவரத்து நடவடிக்கைகளில் இ.போ.ச ஈடுபடக்கூடியதாயிற்று. அதற்கேற்ப தற்போது இலங்கையில் அதிவேக நெடுஞ்சாலை முறையூடாக செயலாற்றும் எமது உல்லாச பஸ்களும் தனியார் பஸ்கட்கு சமனான அமைந்துள்ளது.

- **சமாந்தரமான போக்குவரத்துச் சேவைகள் செயலிழக்கும் போது இ.போ.ச அளிக்கும் சேவை**

  சமாந்திரமான போக்குவரத்துச் சேவைகளில் அடிக்கடி ஏற்படுகின்ற செயலிழப்பினால் நிர்க்கதிக்கு உள்ளாகும் எமது மக்களுக்கு விசேட நிவாரண சேவை வழங்குவது இ.போ.ச வாகும். எம்மிடமுள்ள பஸ் வண்டிகள் மூலம் கிராமங்களிலும் நகரங்களிலும் செயலாற்றும் பல்வேறு சந்தரப்பங்களில் இடருறும் மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை இ.போ.ச அளித்து வருகிறது.

<u>செயலகப் பகுதி</u>

2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் – 13 ஆகும்.

இவற்றில் அவசர பணிப்பாளர் சபைக் கூட்டமும், 01 விசேட பணிப்பாளர் சபைக் கூட்டமும் அடங்கும்

கூட்டம்	திகதி
1 வது கூட்டம்	2015.03.01
2 வது கூட்டம்	2015.03.31
3 வது கூட்டம்	2015.04.07
4 வது கூட்டம்	2015.04.29
5 வது கூட்டம்	2015.05.12
6 வது கூட்டம்	2015.05.29
7 வது கூட்டம்	2015.06.26
8 வது கூட்டம்	2015.08.06
9 வது கூட்டம்	2015.08.27
10 வது கூட்டம்	2015.10.12
11 வது கூட்டம்	2015.11.19
விசேட கூட்டம்	2015.12.01

மேற்குறித்த கூட்டங்கள் தெடர்பாக நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்

1. பணிப்பாளர் சபைக் கூட்டம் நடைபெறவிருக்கும் தினத்தை குறிப்பிட்டு பணிப்பாளர் சபையின் சகல உறுப்பினர்களுக்கும் இ.போ.ச பகுதி/பிரிவு தலைவர்கட்கும் அறிவித்தல் விடுத்தல்.

2. சபை விஞ்ஞாபனங்களை பொறுப்பேற்று விஞ்ஞாபன இலக்கத்தை இட்டு பதிவு செய்ததன் பின்னர் கோவை தயாரித்து பணிப்பாளர் சபை உறுப்பினர்களிடம் கையளித்தல்.

3. பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படும் பணிப்பாளர் சபை விஞ்ஞாபனங்களுடன் தொடர்புடைய சுற்றறிக்கை கடிதங்களையும் குறிப்பிட்டு பணிப்பாளர் சபையின் கூட்ட நிகழ்ச்சி நிரலை தயாரித்தல்.

4. நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவும் தலைவரின் அறிவுறுத்தலின் பேரிலும் பணிப்பாளர் சபை விஞ்ஞாபனங்களையும் சுற்றறிக்கைக் கடிதங்களையும் சமர்ப்பித்தல்.

5. அவ்வந்த பணிப்பாளர் சபை விஞ்ஞாபனத்துக்கும் சுற்றறிக்கை கடிதங்கள் தொடர்பாக பணிப்பாளர் சபை அளிக்கும் தீர்மானங்களையும் இடை நேர் விளைவான தீர்மானங்களையும் சரியாக அறிக்கையிட்டு பணிப்பாளர் சபை தீர்மானங்களை விடய இலக்கத்திற்கேற்ப தயாரித்தல்.

6. அவ்வாறு குறிப்பிட்ட பணிப்பாளர் சபைத் தீர்மானங்களுக்கு பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்ற பின்னர் அப்பணிப்பாளர் சபைத் தீர்மானங்களின் பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகளை அப்பணிப்பாளர் சபைத் தீர்மானங்களை செயற்படுத்த வேண்டிய உரிய இ.போ.ச பகுதித் தலைவர்கள்/ பிரிவுத் தலைவர்களுக்கு கையளித்தல்.

7. இந்நடவடிக்கைகள் யாவும் சரியாகவும் அந்தரங்கமாகவும் முறையாகவும் நிறைவேற்றப்படுதல்.

8. இ.போ.ச பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் பணிப்பாளர் சபைகளுக்கு அழைக்கப்படும் பகுதி/பிரிவுத் தலைவர்கட்கும் உபசரணை அளித்தல்.

9. பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் பங்குபற்றும் (இ.போ.ச அலுவலர் அல்லாதோர்) பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு பங்குபற்றுவதற்கான படி அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

10 பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் பங்குபற்றும் (இ.போ.ச அலுவலர் அல்லாதோர்) பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு போக்குவரத்துப் படி அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் காணி பூமிகள் தொடர்பான நடவடிக்கைகள் நிறைவேற்றல்

பஸ் கம்பனிகள் தேசிய மயமாக்கப்படும் போது இலங்கை போக்குவரத்து சபைக்கு உடைமையாக்கிய, கையகப்படுத்தப்படும் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட, கொள்வனவு செய்யப்பட்ட காணிகள் மற்றும் உரிய காணிகட்குத் தத்துவம் உள்ள நிறுவகங்களிடமிருந்து குத்தகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட காணிகள் தொடர்பாக இ.போ.ச பணிப்பாளர் சபையின் தலைவர், உப தலைவர், பிரதம நிறைவேற்று அலுவலர் ஆகிய உயர் முகாமைத்துவத்தின் அறிவுறுத்தல்கட்கேற்ப நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்வது செயலகப் பகுதித் தலைவரின் பொறுப்பாகும். அதற்கேற்ப

1. இ.போ.ச காணிவிடயமாக பிணக்குகள் ஏற்படும் போதும் அக்காணிகள் தொடர்பாக அறிவுறுத்தல்கள் தேவைப்படும் போதும் உரிய விவரங்களை உள்ளடக்கி சபை விஞ்ஞாபனம் தயாரித்து பணிப்பாளர் சபைக்கு தகவல் அறிக்கையிடுதலும் அப்பணிப்பாளர் சபை விஞ்ஞாபனங்களுடன் தொடர்புடைய தீர்மானங்களை செயற்படுத்தலும்.

2. இ.போ.ச பொறுப்பிலுள்ள பல காணிகள் முறையாக கையகப்படுத்தப்படாமலும் உடைமையாக்கப்படாமலும் உள்ளமையால் அவற்றை கையகப்படுத்தும், உடைமையாக்கும் நடவடிக்கைகள் அது தொடர்பான சட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்காக பலதரப்பட்ட அரச தரப்பாருடன் தொடர்பு கொண்டு அந்நடவடிக்கைகளை நிறைவேற்றல்.

3. போக்குவரத்து அமைச்சரினாலும், அமைச்சினாலும் வேண்டப்படும் காணி தொடர்பான அறிக்கைகளைத் தயாரித்தல்.

4. இ.போ.ச வசமுள்ள உரிய காணிகள் இறுதியில் இலங்கை குடியரசிற்கு சொந்தமானதென சட்டமொன்று உள்ளது. அதற்கேற்ப அரச காணிகள் தொடர்பான காணி கைந்நூலின் படி காணி அமைச்சு, போக்குவரத்து அமைச்சு இயைபுடைய பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் ஆகியோருடன் இ.போ.ச தரப்பாரும் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

5. இ.போ.ச காணி தொடர்பான சட்டப்பிணக்குகள் ஏற்படும் போது நீதி மன்றத்தில் தோற்றி இ.போ.சபையின் உரிமையை நிலைநாட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

6. இ.போ.ச காணிகளில் வெளித் தரப்பார் அத்துமீறின், இயைபுடைய பொலிஸ் நிலையத்தில் முறையிட்டு அது தொடர்பான விசாரணையை முன்னெடுத்தல்.

7. இ.போ.ச காணிகளை அளவையாளர், உத்தரவு பெற்ற அளவையாளர் மூலம் அளவையிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளல்.

8. வேண்டிய வேளைகளில் இ.போ.ச காணித் துண்டுகட்கு மதிப்பீட்டாளர் அறிக்கை பெறல்.

9. இ.போ.ச பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பெயரில் வெளித்தரப்பாருக்கு குத்தகைக்கு விட்டுள்ள காணிகட்கு குத்தகை அறவிடல்.

10. இ.போ.ச காணி பூமி தொடர்பாக இ.போ.ச அலுவலர் இடையே தொடர்பு ஏற்படுத்தி காணிகள் பற்றி இயைபுடைய அலுவலர்கட்கு அறிவுறுத்துரைகளும் தகவல்களும் அளித்தல்.

ஹேஷான் கேட்டர்ஸ் தனிப்பட்ட கம்பனியினால் இலங்கை போக்குவரத்துச் சபை புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்தில் அமைந்துள்ள பயணிகள் உறையகத்திலிருந்து 2015.12.21 முதல் 2020.12.21 வரையான காலத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

1 ஆம் ஆண்டுக்குள் – 120,000 ✖ 12

2 ஆம் ஆண்டுக்குள் – 120,000 ✖12

3 ஆம் ஆண்டுக்குள் – 135,000 ✖12

4 ஆம் ஆண்டுக்குள் – 135,000 ✖12

5 ஆம் ஆண்டுக்குள் – 135,000 ✖12

2015/2016 ஆம் ஆண்டு பெரும் போகத்தில் நெல்லு களஞ்சியப்படுத்துவதற்காக மதவாச்சி மாகாண வேலைக்கள மண்டபம் இல.2 களஞ்சியசாலை 3 மாதங்கட்கு குத்தகை அடிப்படையில் மாத வாடகை மதிப்பீடு 250,000/- ரூபாவுக்கு அளிப்பதற்கு நடவடிக்கைகள் தொடக்கம்.

இரத்மலானை காணி

546 இலக்கமுடைய மாதிரிப் படத்தில் குறிப்பிட்டுள்ள 26.50 பேச்சர்ஸ் இக் காணித் துண்டு இரத்மலானை தெகிவளை பிரதேச உப அரச அதிபர் அலுவலகம் அமைப்பதற்காக 1988.07.18 ஆந் திகதி அப்போதிருந்த இ.போ.ச தலைவரினால் இரத்மலானை, தெகிவளை உதவி அரச அதிபருக்கு பொறுப்பளிக்கப்பட்டிருப்பினம், அதற்காக எதுவித தவணைக் கட்டணமோ அல்லது பணக் கொடையோ இ.போ.ச விற்குக் கிடைக்கவில்லையெனவும், அத்தகைய நட்ட ஈட்டை/கொடையை பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதெனவும் குறிப்பிடுகிறேன். இது தொடர்பாக காணி ஆணையாளருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இரத்மலானை பிரிவுச் செயலாளரினால் இப் பணிக்கொடை இயன்றளவு விரைவில் பெற்றுத் தர முடியுமென வாய்மொழி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்மலானைக் காணி

இரத்மலானை காலி வீதி, இல 175 உடைய இ.போ.ச காணி அத்து மீறிய வதிவிடக் காரர்களால் அனுபவிக்கப்படுகின்ற 82,83 இலக்க காணித் துண்டுகள் அத்துமீறியோருக்கு அளிக்கப்பட்ட உரித்துச் சான்றிதழை இரத்துச் செய்ய வேண்டுமென கோரி உரித்து இணக்க பிரதி ஆணையாளரினால் அத்தகைய சான்றிதழ் வழங்கப்பட்டிருப்பதற்கு எதிராக நடவடிக்கை

எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. 82,83 இலக்க காணித் துண்டுகள் சட்டத்திற்கு விரோதமாகப் பெற்றுக் கொள்ளப்பட்டமையால் அவற்றின் உரித்தை இரத்துச் செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இ.போ.ச தெல்கொடை பஸ் நிறுத்துமிடத்திற்கென 01 ஏக்கர் 02 ரூட் 15.5 பேச்சஸ் காணித்துண்டுகட்கு காணி கொள்ளும் சட்டத்தின் 460 ஆம் அத்தியாயத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் உரிமையாக்கற் சான்றிதழ் பியகம பிரிவுச் செயலாளருக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்பட்ட 13 காணித்துண்டுகள் தொடர்பாக

2015.11.06 ஆந் திகதி மாண்புமிகு போக்குவரத்து, சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற உரையாடலின்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கேற்ப ஊழியர் சேமலாப நிதிக்கு இ.போ சபையால் செலுத்த வேண்டிய திரண்ட நிலுவை உதவித் தொகையை அளிப்பதற்காக கொழும்பு மாவட்டத்துள் அமைந்துள்ள அடையாளம் காணப்பட்ட 13 காணித் துண்டுகளை காணி கொள்ளும் சட்டத்தின் கீழ் கையாளப்பட்ட காணித் துண்டுகட்காக அரச காணி கட்டளைச் சடத்தின் கீழ் இலவச கொடைப் பத்திரம் பெறுவதற்கு மாட்சிமை தங்கிய ஜனாதிபதியின் அனுமதி உரித்தானது.

மேற்குறித்த 13 காணித்துண்டுகட்கான சீர்திருத்தப்படாத மதிப்பீட்டுப் பெறுமதியுடன் 10 மதிப்பீட்டு அறிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

	காணி	**சீர்திருத்தப்படாத மதிப்பீட்டு பெறுமதி**
1	ஹோமாகமை சாலைக் காணி	164.00
2	மகரகமை சாலைக் காணி	410.00
3	மொறட்டுவை லக்சபதிய (வடக்கு) அமைந்துள்ள இ.போ.ச மொறட்டுவை சாலை, இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட காணி, சியறா சொகுசு பஸ் சாலை ஆகியவை அமைந்துள்ள ஏறத்தாழ 19 ஏக்கர் காணி	1660.00
4	இலங்கை - ஜேர்மன் தொழினுட்ப பயிற்சிப் பாடசாலைக்கு கொள்ளப்பட்ட காணி	750.00
5	மொறட்டுவை சாரதிப் பயிற்சிப் பாடசாலை அமைந்துள்ள காணி	200.00
6	இ.போ.ச கஸ்பேவ சாலை அமைந்துள்ள காணி	518.00
7	பிலியந்தல பஸ் நிலையம் அமைந்துள்ள காணி	322.50
8	வேரகெற வேலைக்கள கிணற்றுக்குக் கொள்ளப்பட்ட காணி	34.00

9	மொறட்டுவை மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் அமைந்துள்ள காணி	1192.00
10	வெரகெரை மத்திய வேலைக்களத்திற்குச் சொந்தமாகவிருந்து (கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம், போதனா வைத்தியசாலை , மோட்டார் வாகன திணைக்களத்தின் செயலாற்றல் தடம்	5000.00
	மொத்தம்	10250.50

பாகொடை பிற்றக்கோட்டை பஸ் நிலையம்

இ.போ.ச பாகொடை பஸ் நிலைய காணி (00 ஏக்கர், றுட் 22.6 பேச்சர்ஸ்) பாரிய காணி கொழும்பு மாநகர சபைக்கு குத்தகை அடிப்படையில் அளித்தல். ஆண்டுக் கூலி 10,000,000 ரூபா.

பிராந்தியங்கள்

கம்பஹா பிரந்தியா முல்லையில் அமைந்துள்ள இ.போ.ச பிராந்திய வேலைக்களம் அமைந்துள்ள காணி 0 ஏக்கர் 03 றுட் , 21 பேச்சர்ஸ் காணியில் 3 பேச்சர்ஸ் காணித்துண்டு பெற்றுத் தருமாறு தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் கோரியுள்ளது. இதற்கான பணிப்பாளர் சபை அனுமதியும் அமைச்சின் அனுமதியும் கிடைத்துள்ளன. இது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏக்கர் 0, றூட் , 216 பேச்சுக்கான உரித்து வெளிப்படுதல் 2016.01.26 ஆம் திகதி தயாரிக்கப்பட்டு பதியப்பட்டது.

ம.ப.நி கடைகள்

இங்கு உரிய நடைமுறை பின்பற்றப்படாது பெற்றிருந்த வியாபார தலங்கட்கான குத்தகை உடன்படிக்கை ஆராயப்பட்டது. அதன் பின்னர் கொழும்பு மாநகர சபை மதிப்பீட்டு பெறுமதியைக் கருத்திற் கொண்டு வியாபார அபிப்பிராயத்தையும் விசாரித்தறிந்து, புதிய குத்தகை வாடகை மீளவாயப்பட்டள்ளது. மீளவாய்வின்படி அதிகரித்த மாத வாடகை ரூ 431,237.30 ஆகும்.

கொக்கலை பழைய பஸ் நிலையம் அமைந்துள்ள இடம்

2015.11.10 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கேற்ப இ.போ.ச பணிக்கொடை நிலுவையைச் செலுத்துவதற்காக கொக்கலை பழைய பஸ் நிறுத்துமிடத்தில் அமைந்தள்ள காணியை வெளியாருக்கு விற்பதற்காக மதிப்பீட்டறிக்கை 2016.01.24 ஆம் திகதி

பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இக் காணி மதிப்பீட்டுப் பெறுமதி 66,500,000/- ரூபா (6 கோடியே 65 இலட்சம்) என மதிப்பீட்டு அறிக்கை கிடைத்துள்ளது.

<u>கடவத்தை பழைய சாலைக் காணி</u>

கம்பஹா மாவட்ட நீதி மன்ற வழக்குத் தீர்ப்பின்படி இ.போ.ச விற்கு கிடைத்த காணி 2016.06.08 ஆம் திகதி இருமடியிடப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

<u>பதுளை ஹிந்தகொடை காணி</u>

இ.போ.ச பதுளை ஹிந்தகொடை தந்திரிகேவத்த காணியின் திரு.கே.பி.பியசேனவின் காணிக்குச் செல்வதற்கான வீதிக்கு குத்தகை கொடுப்பது தொடர்பாக எழுந்துள்ள சிக்கலைத் தீர்த்த பின்னர் அவரின் போலி உரித்து பதுளை பிரிவுச் செயலாளர் அலுவலகத்தில் பாதிப்புக்குள்ளான காணியென தடை யெச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

பதுளை இ.போ.ச காணியில் ஏஷசியா கிறேற் யூனிக்கோன் கம்பனிக்கு அளித்த குத்தகை ஒப்பந்தத்திற்கேற்ப 1998.10.01 முதல் 2014.09.30 வரையான காலத்திற்க செலுத்த வேண்டிய நிலுவை குத்தகை வாடகை 1,470,000/- ரூபா 2015.03.30 ஆம் திகதியன்றுள்ளவாறாக அறவிடப்பட்டுள்ளது.

இ.போ.ச அவிசாவளை சாலையின் குடாகம வழியை விஸ்தரிப்பதற்கு கொள்ளப்பட்ட காணித்துண்டிற்கு 3,569,975/- ரூபாவிற்கான 2015.10.28 ஆந் திகதிய காசோலை மூலம் இ.போ.ச விற்கான நட்ட ஈடு அறவிடப்பட்டது.

இ.போ.ச வேரகெர காணியில் கொழும்பு-ஹொறணை வீதியை விஸ்தரிப்பதற்காக முதனிலைத் திட்ட 9258 துண்டு இலக்கம் 242, 243, 303 ஆகிய காணித்துண்டுகள் கொள்ளப்படுவதற்காக நட்ட ஈடாக 11,760,858/- ரூபா இ.போ.ச பெற்றுக் கொள்ளும்.

இ.போ.ச இரத்தினபுரி சாலைக் காணியின் உரித்தை உறுதிப்படுத்துவதற்காக 44 ஆம் பிரிவின் கீழ் உடைமையாக்கற் சான்றிதழ் வழங்கிய ஆரம்ப த்தினிலிருந்தே இடந்தவறி வைக்கப்பட்டிருந்தமையால் அத்தொகை சான்றிதழை மாவட்டச் செயலாளரிடமிருந்து பெறல்.

மேலும் இரத்தினபுரி சாலைக் காணியின் 228.46 பேச்சர்ஸ் உத்தேச அதிவேக வீதிக்கு உரித்தாக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதால் நட்ட ஈடாக ரூபா 103,786,844.40 நட்ட ஈட்டு உரிமை கோரப்பட்டுள்ளது.

<u>ஹற்றன் சாலை</u>

ஹற்றன் சாலைக்கு சொந்தமான சாலையில் அத்துமீறி குடியிருப்பவர்களை அகற்றுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மேலும் இக்காணி அளவை செய்யப்பட்டு உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதுடன் இக் காணித்

துண்டு காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமானதால் அது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

<u>பாதுகாப்புப் பிரிவு</u>

01. நாடு பூராவும் உள்ள இ.போ.ச விற்குச் சொந்தமான சகல நிறுவகங்கட்கும் பாதுகாப்பு ஏற்பாடு செய்தல்.

02. இ.போ.ச பிராந்திய அலுவலகங்கள், உபசாலைகள், மாகாண வேலைக்களங்கள், சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள் ஆகியவற்றிற்கும் பயணஞ் செய்யும் பொது மக்களிடமிருந்தும் கிடைக்கும் சகல எழுத்து மூல முறையீடுகளையும் விசாரித்தல்.

03. நாடு பூராவும் அமைந்துள்ள இ.போ.ச விற்குச் சொந்தமான நிறுவகங்கட்கு தீயணைப்பு உபகரணங்கள் வழங்கல் /பழுதுபார்த்தல்/கண்காணித்தல்.

04. இ.போ.ச வழக்குகளில் பிணைப்பணம் காசாகச் செலுத்தப்படுமிடத்தும் தலைமையக நிதிக் கொடுக்கல் வாங்கல்களின் நாளாந்த அடிப்படையில் பாதுகாப்பு ஏற்பாடு.

05. இ.போ.ச தலைமையகம் உற்பட சகல இ.போ.ச வேலையிடங்தகளிலுமுள்ள சகல ஊழியர்கட்கும் பயணச் செல்கைச் சீட்டு வழங்கல்.

06. முக்கிய இ.போ.ச இடங்கட்கும், முக்கியமான ஆட்களுக்கும், வாகன நிறுத்துமிடங்கட்கும் பாதுகாப்பு ஏற்பாடு செய்வதுடன் உரிய முகவர் நிலையங்கட்கான சகல வினியோகங்களையும் வழங்கல்களையும் நிருவகித்து கண்காணித்தல்.

07. மோட்டார் போக்குவரத்து திணைக்களம், போக்குவரத்து அமைச்சு, தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம் போன்ற போக்குவரத்து அமைச்சிற்கு சொந்தமான நிறுவகங்கட்கு பாதுகாப்பு ஏற்பாடு செய்து அதன் மூலம் வருவாய் ஈட்டல்.

<u>விஷேட புலனாய்வுப் பிரிவு</u>

ஆண்டு	முடிந்த புலனாய்வுகள்
2015	50

2015 ஆம் ஆண்டில் திடீர் சாலைப் பரிசோதனைகள், பஸ் பரிசோதனைகள், பஸ் நிறுத்துமிட பரிசோதனைகளும் நடைபெற்றன.

<u>தொழினுட்பப் பகுதி</u>

பஸ் அணி பராமரிப்புக் கென பழுதுபார்க்கப்பட்ட எஞ்சின்கள்

விவரம்	தொகை
பழுது பார்க்கப்பட்ட எஞ்சின்கள் தொகை	613
பழுது பார்க்கப்பட்ட கியர் பெட்டிகள் தொகை	413
பழுது பார்க்கப்ட்ட உடற் கோப்புகள் தொகை	272
புதிய பஸ்கள் தொகை	1937
அம்பாறை தயர் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட முன்பதப்படுத்தப்பட்ட தயர்கள் தொகை	12191
பழுதுபார்த்த பஸ் உடற்கோப்பு உறுப்புகள் தொகை	3204
பழுதுபார்த்த எரிபொருள் பம்பி உட்பாய்ச்சிகள் தொகை	413

<u>உள்ளகக் கணக்காய்வு பகுதி</u>

2014 ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் சுருக்கம்

நிதிப் பகுதி

01. வழிப்பட்டியல் செவ்வை பார்த்தல்
02. காசு சரி பார்த்தல்
03. காசேடு செவ்வை பார்த்தல்
04. சம்பளம் மேலதிக நேர வேலை செவ்வை பார்த்தல்
05. சம்பளம், விழா முற்பணம் செவ்வை பார்த்தல்
06. நடாத்துநரின் சோர்வுப் பணம் செவ்வை பார்த்தல்
07. பணிக்கொடை கொடுப்பனவு செவ்வை பார்த்தல்
08. நாளாந்த மொத்த பதிவேடு செவ்வை பார்த்தல்
09. உள்ளூர் கொள்வனவை செவ்வை பார்த்தல்
10. இறுதிக் கணக்குகள் கணக்காய்வு
11. கணக்குப் பகுதியின் இதர பதிவேடுகளை செவ்வை பார்த்தல்

தொகைக் களஞ்சியம்

01. பருவகாலச் சீட்டு பதிவேடு செவ்வை பார்த்தல்
02. களஞ்சியப் பொருள் செவ்வை பார்த்தல்
03. எரபொருள் நுகர்வு செவ்வை பார்த்தல்
04. மாற்றுறுப்புகள் நுகர்வு செவ்வை பார்த்தல்
05. டயர் நுகர்வை செவ்வை பார்த்தல்
06. வில்லுத் தகடுகள் நுகர்வை செவ்வை பார்த்தல்
07. கைதவிர்ப்பு செயற்பாடுகள்

செயலாற்றுப் பகுதி

01. வழிப்பட்டியல் செவ்வை பார்த்தல்
02. விபத்துப் பதிவேட்டை செவ்வை பார்த்தல்
03. சழற்சி கடமைப் பட்டோலை
04. O-51, O-50, O-40, O-41,பதிவேடுகளை செவ்வை பார்த்தல்

பொறியியல் பகுதி

01. பழுதடைவு பழுதுபார்த்தல்
02. மிதமிஞ்சிய மாற்றுறுப்புகள் நுகர்வு
03. அகால பழுதுற்ற மாமற்றுப்புகளை செவ்வை பார்த்தல்
04. பொறியியல் பிரிவின் ஏனைய பதிவேடுகளை செவ்வை பார்த்தல்

ஏனையவை

01. ஒழுக்காற்று பதிவேடுகளை செவ்வைபார்த்தல்
02. விபத்துப்பதிவேடுகளை செவ்வை பார்த்தல்
03. சபைச் சொத்துக்களை செவ்வை பார்த்தல்
04. சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளின் வருவாய், செலவு, பேணல், நிருவாகம், ஆகிய பகுதிகளை கணக்காய்விற்கு உட்படுத்தல்
05. சுற்றுலா வங்களாக்களை செவ்வை பார்த்தல்
06. ஷாலிகா மண்டபம், விளையாட்டரங்கு செவ்வை பார்த்தல்

07. தலைமையலுவலகத்தின் பொதுச் செலவுகள் பகுப்பாய்வு (நீர்,தொலைபேசி, மின்சாரம், எழுதுகருவிவகை)

08. அரச கொள்கை பணிப்பாளர் சபைத் தீர்மானங்கட்கிணங்க செயற்படுத்தப்பட்ட விசேட செய்திட்டங்கள்

09. பிரந்திய உள்ளக்க் கணக்காள்வாளர்களின் மாதாந்த மாநாடு நடாத்தல்

10. பிராந்திய ரீதியாக ஆண்டுதோறும் கணக்காய்வு மாநாடுகளை நடாத்துதல்

11. தலைவர் கட்டளையிடும் விசேட செவ்வை பார்த்தல்கள்

12. பிராந்திய ரீதியாக ஆண்டு தோறும் கணக்காய்வு மாநாடுகளை நடாத்துதல்

<u>மனித வள முகாமைத்துவப் பகுதி</u>

2015 ஆம் ஆண்டில் நியமனம் பெற்ற சாரதிகள்/நடாத்துநர்களின் புது நியமனங்கள் சம்பந்தமான விவரங்கள்		
சாரதிகள் எண்ணிக்கை	நடாத்துநர்கள் எண்ணிக்கை	மொத்தம்
770	628	1398

2015 ஆம் ஆண்டில் சேவை நீடிப்பு பெற்ற நிறைவேற்று நிறைவேற்று அல்லாத உழியர்கள்

ஒப்பந்தம் அடிப்படை	29
ஒப்படைப்பு	56
2015 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மனிதவள முகாமைத்துவப் பிரிவின் சுற்றறிக்கைப் பிரகாரம்	206
மொத்தம்	291

நிறைவேற்று நியமனங்கள் பற்றிய விபரம்

நிரந்தர நியமனங்கள்	**16**
தழுவல் நியமனங்கள்	**131**
பதவி உயர்வுகள்	**08**
உறுதிப்படுத்தல்கள்	**19**
இடமாற்றங்கள்	**167**
ஒப்பந்த நியமனங்கள்	**06**
புதிய ஆட்சேரப்புகள்	**0**

2015.12.31 ஆம் திகதியன்றுள்ளவாறாக இலங்கை போக்குவரத்துச் சபையில் உழியர் தொகை

நிறைவேற்று	**1197**
நிறைவேற்று அல்லாத	**8493**
சாரதிகள்	**10563**
நடாத்துநர்கள்	**10532**
பொறிவலர்கள்	**5001**
பயிற்சி பெறுவோர்	**71**
மொத்தம்	**35857**

2015 ஆம் ஆண்டில் மீளவேலைப் பொழிப்பு

தொடர் இல	**பதவிப் பெயர்**	**மீள நிறுவல்**	**ஒப்பந்தம்**	**அமய**	**மொத்தம்**
1		381	49	9	439
2		236	31	4	271
3		97	17	1	115
4		204	57	6	267
		918	**154**	**20**	**1092**

திடீர் பரிசோதனைப் பிரிவு

2015 ஆம் ஆண்டு திடீர் பரிசோதனை முன்னேற்ற அறிக்கை (தீவடங்கிலும்)

மாதம்	**குழுக்கள் எண்ணிக்கை**	**செவ்வை பார்த்தல் எண்ணிக்கை**	**செவ்வை பார்த்த பஸ்கள் எண்ணிக்கை**	**பாரதூரமான குற்றங்கள் (IV)**	**சிறு குற்றங்கள் (V)**	**தண்டம் விதித்த பயணிகள் எண்ணிக்க**	**விதித்த தண்டப் பணம் (ரூபா)**
ஜனவரி	38	766	10,460	49	112	324	108,297.00
பெப்ரவரி	67	814	11,237	56	154	363	121,004.00
மார்ச்	84	780	11,409	73	222	489	158,183.00
ஏப்ரல்	117	934	15,046	73	378	702	246,080.00
மே	98	965	12,781	81	248	499	169,099.00
யூன்	109	968	14,282	87	271	618	202,158.00

யூலை	108	1,211	16,408	74	416	601	201,105.00
ஆகஸ்ட்	97	1,170	15,851	82	381	586	199,348.00
செப்தம்பர்	108	1,323	17,812	100	554	741	242,159.00
ஒக்டோபர்	124	1,389	18,972	93	528	690	240,534.00
நவம்பர்	117	1,200	17,584	69	412	585	194,530.00
டிசம்பர்	127	1,254	18,059	94	412	662	236406.00
மொத்தம்	**1,194**	**12,774**	**179,901**	**931**	**4,088**	**6,860**	**2,318,903.00**

திடீர்ப் பரிசோதனைக் குழு (மத்திய)

மாதம்	**குழுக்கள் எண்ணிக்கை**	**செவ்வை பார்த்தல் எண்ணிக்கை**	**செவ்வை பார்த்த பஸ்கள் எண்ணிக்கை**	**பாரதூரமான குற்றங்கள் (IV)**	**சிறு குற்றங்கள் (V)**	**தண்டம் விதித்த பயணிகள் எண்ணிக்க**	**விதித்த தண்டப் பணம் (ரூபா)**
ஜனவரி	05	63	827	15	15	38	13,356.00
பெப்ரவரி	05	77	1,273	27	27	96	31,312.00
மார்ச்	05	79	1,321	37	43	130	42,347.00
ஏப்ரல்	05	77	1,403	23	29	126	43,562.00
மே	05	79	1,392	30	23	93	30,702.00
யூன்	05	93	1,515	29	22	91	31,556.00
யூலை	05	81	1,441	17	26	64	23,050.00
ஆகஸ்ட்	05	68	1,247	20	23	74	23,836.00
செப்தம்பர்	05	70	1,227	27	25	73	15,710.00
ஒக்டோபர்	05	77	1,077	22	28	53	20,294.00
நவம்பர்	05	69	1,086	12	35	49	18,004.00
டிசம்பர்	05	75	1,252	24	38	63	23,169.00
மொத்தம்		**908**	**15,061**	**284**	**334**	**950**	**319,898.00**

அபிவிருத்தி திட்டமிடல் பிரிவு

01 வரவு செலவு திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் ஆண்டுகட்கு செயற் திட்டம் தயாரித்தல்.

02 வரவு செலவு திட்டத்தை அடிப்படையாக் கொண்டு எதிர்வரும் 03 ஆண்டுக்கான கூட்டிணைந்த திட்டத்தை தயாரித்தல்.

03 செயற்திட்டத்திற்குறி மாதாந்த முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்தல்

04 செயற்திட்டத்திற்குறி காலாண்டு முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்தல்

05 போக்குவரத்து அமைச்சு கோரும் பல்வேறு அறிக்கைகளை தயாரித்து சமர்ப்பித்தல்.

06 இலங்கை மத்திய வங்கி, புள்ளி விவரத் திணைக்களம் ஆகிய நிறுவகங்கள் கோரும் அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பித்தல்.

07 இதர அரச நிறுவகங்கள் கோரும் அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பித்தல்

08 மாதாந்த இலாப நட்ட அறிக்கை தயாரித்து சம்ர்ப்பித்தல்

09 மாதாந்த இலாப நட்ட அறிக்கைக்குரிய பொழிப்புரை தயாரித்து சமர்ப்பித்தல்.

10 மாதாந்த பருவச் சீட்டு அறிக்கை தயாரித்து சமர்ப்பித்தல்.

11 பொறுப்புக்கள் அறிக்கை தயாரித்தல்

2015 ஆம் ஆண்டுக்கான கேள்விப் பத்திரங்கள்

தொடர் இல	கேள்விப் பத்திர இல	மேற் கொண்ட செயற்பாடுகள்	தற்போதைய நிலையும் முன்னேற்றமும்
01	SLTB/TS/GEN/2015/02 I	மோட்டார் மாற்றுறுப்பு கொள்வனவிற்கான கூறுவிலை - 2015	இதுவரை கொள்வனவு செய்யப்படுகிறது
02	SLTB/TS/GEN/2015/19 II	இ.போ.ச தலைமை அலுவலகத்திற்கான டோனர்ஸ், காட்ரிட்ஜ் கூறுவிலை	முடிவடையவில்லை
03	SLTB/TS/GEN/2015/19 I	தலைமையலுவகத்திலுள்ள எழுது கருவிவகைக்கான கூறுவிலை	முடிவடையவில்லை

04	SLTB/TS/GEN/2015/19 III	இ.போ.ச விற்கான 2200 பென் ட்றைவ் கொள்வனவிற்கான கூறுவிலை	முடிவடைந்தது
05	SLTB/TS/GEN/65/2015	அதி சொகுசு யூடோங் பஸ்கட்கான புதிய தயர் கொள்வனவு செய்வதற்கு கூறு விலை கோரல்	204 மட்டும் கொள்வனவு செய்யப்பட்டது
06	SLTB/TS/GEN/65 I/2015	அதி வேக வழியில் செயலாற்றும் லேலன்ட் சொகுசு பஸ்கட்கான தயர்கிட் கூறுகளை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை கோரல்	கொள்வனவு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது
07	SLTB/TS/GEN/07/2015	ஊறு கொடவத்தை இரத்மலானை எரிபொருள் நிரப்பும் நிலையங்கட்கான எரிபொருள் பம்பிக்கான கூறு விலை கோரல்	இரண்டாவது தடவை கூறு விலை கோரப்பட்டது
08	SLTB/TS/GEN/28/2015	4100 புதிய பற்றறிகள் அல்லது அமில பற்ற்றிகள் வழங்கலுக்கும் ஒப்படைத்தலுக்குமான கூறல்.	சாலைத் தேவைக் கேற்ப கொள்வனவு செய்யப்பட்டது
09	SLTB/TS/GEN/12 (I)/2015	அம்பாறை தயர் தொழிற்சாலை உற்பத்திக்கான மாதாந்த மூலப் பொருட் தேவைகளுக்கும் போக்குவரத்துக்குமான கொள்வனவு செய்தல்	தற்போதும் கொள்வனவு நடைபெறுகிறது
10	SLTB/TS/GEN/07(I)/2015	சம்மாந்துறை சாலை, ஊறுகொடவத்தை , இரத்மலானைக்கு நிலத்தின் கீழான எரிபொருட் தாங்கியை வினியோக பம்பியும் வழங்கலும், ஒப்படைத்தலும், நிறுவுதலும்	கேள்விப் பத்திர சபை அனுமதியுடன் கூறு விலையின் கீழ் இரத்மலானை எரிபொருள் நிரப்பும் சாலைக்கு மாத்திரம் 02 பம்பிகள் கொள்வனவு செய்யப்பட்டன
11	SLTB/TS/GEN/2015/76	டிஜிட்டல் கமரா ஒன்று இ.போ.ச விற்கு கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை	பூர்த்தி செய்யப்பட்டது
12	SLTB/TS/GEN/2015/78	இ.போ.ச மத்திய பஸ் நிலையத்திற்கு தேவையான நீரிறைக்கும் மோட்டார் இயந்திரம் 02 கொள்வனவு செய்வதற்கான கூறு விலை கோரல்	அனுமதிக்கப்பட்டது
13	SLTB/TS/Civil/2015/16(I)	புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்திலுள்ள நீர்த்தேக்கிக்கு உட்பூச்சு பூசுவதற்கான கூறுவிலை	வேலை நடை பெறவில்லை

14	SLTB/TS/GEN/2015-2	மாகாண வேலைக்களங்கட்கு பஸ் உடற் கோப்பு கட்டும் பொருட்கள் வழங்கவும் ஒப்படைப்பதற்குமான கூறுவிலை	பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.
15	SLTB/TS/GEN/2015-Rexene	இ.போ.ச பஸ்களில் பயணி ஆசனங்கட்கு றெக்சின் கொள்வனவு	சாலை, பிரதேசங்களின் தேவைக்கு ஏற்ப கொள்வனவு செய்யப்பட்டது.
16	SLTB/TS/GEN/80/2015	இலங்கை பூராவுமுள்ள இ.போ.ச சாலைகளிலுள்ள ஊழியர் ஓய்வரைகட்கு தேவையான வீட்டுத் தேவைக்கான பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை	பூர்த்தியாயிற்று
17	SLTB/TS/GEN/10/2015	100 இலத்திரனியல் சாதனங்களை இ.போ.ச அதி சொகுசு பஸ்கட்கு பொருத்துவதும், வழங்கலும் ஒப்படைத்தலுக்குமான கூறுவிலை	கொள்வனவு செய்யப்பட்டது
18	SLTB/TS/Civil/2015/16 II	ஷாலிகா மைதானத்திற்கு மண் நிரப்புவதற்கான கூறுவிலை	வேலை நடைபெறவில்லை
19	SLTB/TS/Civil/2015/16 III	தம்புள்ள சாலையில் வழங்கத்துலக்கலுக்கான சாய்தளம் நிருமாணித்தல்	அனுமதி கிடைத்தும் பணி நடைபெறவில்லை
20	SLTB/TS/Civil/2015/16 IV	கழுத்துறையிலுள்ள சாரதி பயிற்சிப் பாடசாலையின் பிரதான கட்டடத்தை பழுதுபார்த்தலும் பராமரித்தலும்	கட்டம் 1 சிவில் பொறியியல் பகுதியால் நிறைவேற்றப்பட்டது.
21	SLTB/TS/Gen/65 (i) 2015	யூடோங் பஸ்கட்கு தயர் கொள்வனவு செய்தல்	254 தேவையென கட்டளையிடப்பட்டிருந்தும் 204 மட்டுமே கொள்வனவு செய்யப்பட்டது
22	SLTB/TS/Civil/2015/16-V	கழிவு நீர் செல்வதற்கான வழியொன்றை நிருமாணிப்பதற்கான கூறுவிலை	நடைபெறவில்லை
23	SLTB/TS/GEN/74/2015	இ.போ.ச விற்கு 50 கணனிகளும் , UPS உம், பிறின்டேர்சும், 10 மடிக் கணனிகளும் வழங்கி ஒப்படைப்பதற்கான கூறுவிலை	பூர்த்தியாக்கப்பட்டது
24	SLTB/TS/Gen/10/2015/II	இ.போ.ச விற்கான ஒளிப்பட நகல் பொறிகளை வழங்கி ஒப்படைப்பதற்கான கூறுவிலை	கொள்வனவு செய்யப்பட்டது

25	SLTB/TS/SUB/(Au)01/2015	இ.போ. சபைக்கு சொந்தமான உபயோகத்தின் பின்னர் உபயோகத்திலிருந்து நீக்கப்பட்ட பயன்பாட்டிற்கு உதவாத பஸ்களை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு தகுந்த ஏல விற்பனையாளரைத் தெரிவு செய்வதற்கான கூறு விலை	முடிவுற்றது
26	SLTB/TS/GEN/2015/81	நேரம் பதியும் மணிக் கூடொன்றைக் கொள்வனவு செய்வதற்கான கூறு விலை கோரல்	உரிய சாலை கொள்வனவு செய்யும்படி அனுமதிக்கப்பட்ட கூறுவிலை அளிக்கப்பட்டது
27	SLTB/TS/GEN/2015/02(ii)	டாட்டா, லேலன்ட் மோட்டார் வாகன மாற்றுறுப்புகள் கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை	கேள்விப் பத்திரங்கள் மாத்திரம் திறக்கப்பட்டுள்ளன
28	SLTB/TS/Adv/2015	4000 இ.போ.ச பஸ் வண்டிகளில் விளம்பரங்களை வெளிக்காட்டுவதற்காக தகுந்த விளம்பர நிறுவகத்தை தெரிவு செய்வதற்கான கூறு விலை கோரல்	முடிவுற்றது
29	SLTB/TS/Canteen/2015	இ.போ.ச உண்டிச்சாலையை நடாத்துவதற்கான கூறு விலை கோரல்	முடிவுற்றது
30	SLTB/TS/GEN/2015/80	மின்சார பழுதுபார்த்தல் பேணலுக்கு கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை	பூர்த்தியாக்கப்பட்டது
31	SLTB/TS/GEN/07/2015	புதிய எரிபொருள் விநியோக பம்பி 60 கொள்வனவு செய்தல்	கொள்வனவு செய்யப்படவில்லை
32	SLTB/TS/Gen/Civil/10/2015/(VIII)	ஷாலிகா விளையாட்டரங்கு பார்வையாளர் கூடம் பழுது பார்த்தலுக்கான தகடு கொள்வனவு செய்தல்	பூர்த்தியாக்கப்பட்டது
33	SLTB/TS/GEN/2015/84	இ.போ.ச தலைமையலுவலகத்திற்கு நுழைவிடத்திற்கான புதிய கம்பியற்ற தொகுதியைக் கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை	கட்டளையிடப்பட்டும் இன்னும் வழங்கப்படவில்லை
34	SLTB/TS/GEN/SpringBlades/01/2015	இ.போ.ச பஸ்கட்குத் தேவையான வில்லுத் தகடுகளை கொள்வனவு செய்தல்	கூறுவிலைகள், கோரப்பட்டது. கொள்வனவு பிரதேசஅலுவல

			கங்கள் மூலம் நடைபெறுகிறது
35	SLTB/TS/GEN/55/2015	எஞ்சின் முற்றாகப் பழுது பார்த்தலுக்கான கூறு விலை கோரல்	பி.பொது முகாமையாளர் (தொழினு ட்பம்) அனுமதியுடன் விலை அனுமதிக்கப்பட் டது
36	SLTB/TS/GEN/2015/84	இ.போ.ச தலைமையலுவலகத்திற்குத் தேவையான மின் பொருட்களுக்கான கூறு விலை கோரல்	மீதி நடவடிக்கைக்கா க வழங்கல் பகுதிக்கு அனுப்பப்பட்டுள் ளது
37	SLTB/TS/GEN/Civil/2015/16(IX)	சியம்பலாண்டுவ உப சாலையில் வழங்கத்துக்கல் கிடங்கு நிருமாணம்	நிறுத்தப்பட்டுள் ளது
38	SLTB/TS/GEN/Civil/2015/16(IX)	மகரகம சாலையில் எண்ணெய் இடைமறிக்கும் (செங்கற் சுவர்கள்) வழங்கத் துலக்கல் செய்யும் சாய்தளம் நிருமாணம்	நடைபெறவில் லை
39	SLTB/TS/GEN/Civil/2015/16(IX)	கண்டி பஸ் நிலையத்தில் மணிக் கூட்டுக் கோபுரத்துக்கருகில் உத்தேச நேரக் காப்பாளர் கட்டடத்திற்கான கூறு விலை	நடைபெறவில் லை
40	SLTB/TS/GEN/2015/32	தீயணைக்கும் உபகரணங்கட்குத் தேவையான கரியமில வாயுவை நிரப்புவதற்கும் அதனுடன் தொடர்புடைய பழுதுபார்த்தல்களைச் செய்வதற்குமான கூறு விலை கோரல்	வேலை முற்றாக முடியவில்லை
41	SLTB/TS/GEN/79/2015	இ.போச பஸ்கட்கு வேண்டிய, ரியூப்களையும் மடிப்புகளையும் வழங்கலும் போக்குவரத்தும்	முன் கொண்டு செல்லப்பட்டுள் ளது
42	SLTB/TS/GEN/2015/74/II	கணனி சேவை இயந்திரம், UPS இயந்திரம் ஆகியவற்றை இ.போ.ச தலைமை அலுவலகத்திற்குக் கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை	பூர்த்தியாகிற்று
43	SLTB/TS/GEN/Civil/2015/16(XI)	கட்டுபெத்த சோக்கம் பஸ் சாலையில் எ்குவளை நிருமாணத்தலும் தளத்திற்கு கொங்கிறீற் இடுதலும்.	சிவில் பொறியியல் மூலம் செய்யப்பட்டது
44	SLTB/TS/GEN/2015/19/II	இ.போ.ச தலைமையலுவலகத்திற்கு டோனர்கட்கான கூறுவிலை	முடிவுற்றது

45	SLTB/TS/GEN/DRIVING/II/2015	2016 ஆம் ஆண்டிற்கு இ.போ.ச தலைமையலுவலக அலுவலக வாகனச் சாரதிகட்கு சீருடைகட்கு அவசியமான துணிக்கும் தையற் கூலிக்குமான கூறு விலை கோரல்	முடிவுற்றது
46	SLTB/TS/GEN/05/2015	இ.போ.ச சகல சாலைகட்கும் பிராந்திய அலுவலகங்கட்கும் நிதிப் பகுதிக்கான பணம் பொறுப்பேற்கும் பற்றுச் சீட்டு (றி-10) அச்சிடுவதற்கான கூறுவிலை கோரல்	முடிவுற்றது
47	SLTB/TS/Civil/16/2015	புறக் கோட்டை மத்திய பஸ் நிலையத்திலுள்ள மெற்றோ இன் பயணிகள் தங்குமிடத்தையும் உண்டிச் சாலையையும் பழுது பார்த்து 05 ஆண்டுகட்கு இ.போ.ச விற்கு மாதக் குத்தகை கட்டணம் செலுத்தி நடாத்து வதற்கான கூறுவிலை	குத்தகை அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது
48	SLTB/TS/GEN/28/2015	இ.போ.ச யூ டோங் பஸ்கட்குத் தேவையான புதிய பற்றறிகளைக் கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை	கொள்வனவு செய்யப்படவில்லை
49	SLTB/TS/GEN/18/2015	இ.போ.ச விற்கு மின்பிறப்பாக்கி யொன்றினை வழங்குவதற்கான கூறுவிலை	அனுமதி கிடைத்துள்ளது
50	SLTB/TS/GEN/05 – (II)/2015	2016 ஆம் ஆண்டிற்கு இ.போ.ச சாலைகட்கு முழு ஆண்டுக்கும் தேவையான பருவச் சீட்டை அச்சிடுவதற்கான கூறுவிலைகள் கோரல்	முடிவுற்றது
51	SLTB/TS/GEN/2015/65(II)	இ.போ.ச யூடோங் பஸ்கட்குத் தேவையான 900 புதிய டயர்கள் வழங்கலுக்கும் போக்குவரத்திற்குமான கூறுவிலை கோரல்	முன் கொணரப்பட்டுள்ளது
52	SLTB/TS/GEN/05 – (III)/2015	இ.போ.ச தலைமையலுவலகத்திற்கு தேவையான அச்சிட்ட படிவங்களை அச்சிடுவதற்காக - 2016	விலை அனுமதிக்கப்பட்டு சாலைத் தேவைக்கேற்ப பெற்றுக் கொள்ளுமாறு சாலைகட்கு அறிவிக்கப்பட்டுள்ளது
53	SLTB/TS/GEN/ADD/2015	இ.போ.ச பஸ்களில் வியாபார விளம்பரங்கள் வெளிக்காட்டுவதற்குத் தகுதி வாய்ந்த விளம்பர நிறுவகமொன்றைத் தெரிவு செய்வதற்கான கூறு விலை கோரல்	முடிவுற்றது
54	SLTB/TS/GEN/90/2015	இ.போ.ச விற்கு சொந்தமான பதுளை ஹிந்த	தற்காலிகமாக

		கொடை தந்திரிகேவத்தை காணி வளவை மாதாந்த கூலி அடிப்படையில் குத்தகைக்கு விடுவதற்கான கூறு விலை கோரல்	நிறுத்தப்பட்டுள் ளது
55	SLTB/TS/PS/01//2015	இ.போ.சபைக்கு சொந்தமான பிராந்திய அலுவலகங்கள்,பிராந்திய வேலைக்களங்கள்,சாலைகள் ஆகியவற்றுக்கு பாதுகாப்பு சேவை பெறுவதற்கான கூறு விலை கோரல்	தகுதியான சேவைப் பகுதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள் ளது
56	SLTB/TS/GEN/05/2015	இ.போ.ச பஸ்கட்குத் தேவையான பயணச் சீட்டுப் புத்தகங்களும் பயணப் பொதி சீட்டுப் புத்தகங்களும் அச்சிடுவதற்கான கூறுவிலை கோரல்	கூறுவிலை அனுமதிக்கப்பட் டு சாலைத் தேவைக்கேற்ப பெற்றுக் கொள்ளுமாறு சாலைகட்கு அறிவிக்கப்பட்டு ள்ளது.
57	SLTB/TS/GEN/25/2015	2016 ஆம் ஆண்டுக்கு புதிய காப்புறுதியினைப் பெற்றுக் கொள்வதற்கான விலை கூறல்	கூறு விலை மாத்திரம், கோரப்பட்டுள்ள துடன் சேவைகள் பிராந்திய அலுவலகங்களா லும் சாலைகளாலும் பெறப்படுகின்ற ன
58	SLTB/TS/GEN/25/2015	இ.போ.ச பிராந்திய வேலைக்களங்களுக்குத் தேவையான கொள்வனவுகட்காக கோரப்பட்ட கூறு விலைகளைத் திறத்தல்	முடிவுற்றது
59	SLTB/TS/GEN/2015/32 I	இ.போ.ச யட்டிநுவர வேலைக்களத்திற்குத் தேவையான தீயணைப்பு உபகரணங்கள் கொள்வனவு செய்யவும் தீயணைப்பு உபகரணங்களை பழுதுபார்க்கும் பகுதிக்கு நைட்ரஜன் வாயு நிரப்பும் இயந்திரமொன்றை தயாரிப்பதற்கு வேண்டிய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குமான விலை கோரல்	பூர்த்தியாக்கப்ப ட்டது
60	SLTB/TS/GEN/07/2015	இ.போ.ச விற்குத் தேவையான காற்றுச் சீராக்கிகள் கொள்வனவு செய்வதற்கான கூறு விலை	முடிவுற்றது
61	SLTB/TS/GEN/45/2015	இ.போ.ச நுவரெலிய சுற்றுலா வங்களாவிற்கு (I) மின்சார “கீசர்” கொள்வனவு செய்வதற்கான	பூர்த்தியாக்கப்ப ட்டது

		கூறு விலை கோரல்	
62	SLTB/TS/GEN/18-I/2015	இ.போ.ச ஹற்றன் சாலைக்கு மின் பிறப்பாக்கியொன்றை வழங்குவதற்கான கூறுவிலை கோரல்	கொள்வனவு செய்யவில்லை
63	SLTB/TS/Toner(Scrap)/2014	இ.போ.ச தலைமையலுவலக உபயோகத்திலிருந்து அகற்றப்பட்ட ரோணர்களை விற்பனை செய்தல்	பூர்த்தியாக்கப்பட்டது
64	SLTB/TS/old Newspapers/2015/I	பழைய செய்தித்தாள்களுக்கான கூறு விலை கோரல்	பூர்த்தியாக்கப்பட்டது
65	SLTB/TS/SUI/01/2015	இ.போ.ச ஊவா , கிழக்குப் பிராந்தியத்தைச் சேர்ந்த சாலைகள் யட்டிநுவர, வேலைக்களம் ஆகியவற்றிலிருந்து அகற்றப்பட்ட மாற்றுறுப்புகள் விற்பனை	பூர்த்தியாக்கப்பட்டது
66	SLTB/TS/SUB/01/2015	இ.போ.ச ஹற்றன் சாலைக்கு மின் பிறப்பாக்கியொன்றை வழங்குவதற்கான கூறு விலை கோரல்	கொள்வனவு செய்யவில்லை
67	SLTB/TS/GEN/2015/93	இ.போ.ச டயர் வேலைத்தளத்திலுள்ள "பபின்" விற்னைசெய்வதற்கான கூறு விலை கோரல்	முடிவுற்றது

<u>தகவல், தொடர்பாடல் , தொழினுட்பவியல் பகுதி</u>

01. 200 கணனி இயந்திரங்கள் கொள்வனவு
02. 100 அச்சிடும் இயந்திரங்கள் கொள்வனவு
03. 200 UPS இயந்திரங்கள் கொள்வனவு
04. 2200 இலத்திரனியல் பஸ் பயணச் சீட்டு இயந்திரங்கள் கொள்வனவு
05. GPS இயந்திரத்துடன் கூடிய சேரிடம் காட்டும் பலகைகள் பொருத்தல்
06. சம்பளம் தயாரிப்பதற்கு மென்பொருள் செயற்படுத்தல்
07. உரிய மென்பொருளில் இ.போ.ச ஊழியர்கட்கு பயிற்சியளித்தல்
08. இ.போ.ச தலைமையகத்திலும் சாலைகளிலும் கணினிகளிலும் அது தொடர்பாக ஏற்படும் நாளாந்த பிரச்சினைகளைத் தீர்த்து கணனி பராமரிப்பை நிருவகித்து பணிப்புரைகள் வழங்கி வேண்டிய நடவடிக்கை எடுத்தல்.

வினியோக/ வானிப பகுதி

01. நாடு பூராவுமுள்ள பிராந்திய வுலைக்களங்கள் யாவற்றிற்கும் நடைமுறைக்கேற்ப மாற்றுறுப்புகளையும், துணையுறுப்புகளையும் கொள்வனவு செய்து, அவற்றை கையிருப்பிலிட்டு, வழங்கி கொடுப்பனவு விற்கான உறுதிச்சீட்டுக்களை நிதிப் பிரிவிற்கு அனுப்புதல். அத்துடன் நாடு பூராவுமுள்ள சாலைகட்குத் தேவையான மாற்றுறுப்புகளை தொழினுட்ப பகுதியின் விதப்புரையுடன் கொள்வனவு செய்து, மேற்குறித்தவாறு வழங்கி, கொடுப்பனவிற்காக அனுப்புதல்.

02. எல்லா பகுதிகள்/பிரிவுகளிடமிருந்து ஆண்டுதோறும் தேவைப்படும் எழுதுகருவிவகை, ரோனர்ஸ், பென்ட்றைவ், கணனிகள் ஆகியவற்றின் விவரங்களைத் திரட்டி உரிய கேள்விப்பத்திர சபைக்கு சமர்ப்பித்து, கூறுவிலைகள் கோரப்பட்ட பின்னர் விலைகளையும் பட்டோலையையும் மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பித்து அக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் விலைகளும் வழங்குநர்களும் தெரிவு செய்யப்பட்டு அதற்கேற்ப 2 மாத்த தேவை கட்டளையிடப்பட்டு "பின்" அட்டையில் உரிய பதிவுகளைச் செய்து கொடுப்பனவுகள் செய்து பொருட்களை வினியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

03. சகல அலுவலக உபகரணங்களும் கணனிகள், அத்துடன் தொடர்புடைய துணையுறுப்புகள், அச்சிடும் இயந்திரங்கள்,UPS இயந்திரங்கள், வளிச்சீராக்கிகள், கைவிரல் அடையாள இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், ஆகியனவும் அலுவலகத் தளபாடங்களும் தேவைக்கேற்ப கொள்வனவு செய்யப்பட்டு கேள்விப்பத்திர சபை அனுமதி கிடைத்த பின்னர் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.

04. அங்கீகரிக்கப்பட்ட விலைகளையும், வழங்குநர்களின் விவரங்களையும் சகல இ.போ.ச சாலைகட்கும், பிராந்திய வேலைக்களங்கட்கும், பிராந்தியங்கட்கும் அறவித்தல் வேண்டும். இதனால் அவர்கள் தங்கள் அலுவலக உபகரணத் தேவைகளை தேவைக்கேற்றவாறு கொள்வனவு செய்யக் கூடியதாயிருக்கம்.

05. சகல இ.போ.ச சுற்றுலா வங்களாக்கட்கும், விடுதிகட்கும் தேவையான தளவாடங்கள், சமையலறைப் பாத்திரங்கள், மின்சார உபகரணங்கள் ஆகியவற்றை அனுமதிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலை கணிப்பிற்கேற்ப கொள்வனவு செய்து, வினியோகித்து, கொடுப்பனவு செய்து பொருட் பதிவேடு செய்தல் வேண்டும்.

06. கேள்விபத்திர சபை அனுமதியுடன் இ.போ.ச தலைமையலுவலகத்திற்கும், தலைமையலுவலக நிதி ஒதுக்கீட்டின் கீழ் இயங்குகின்ற வேலையிடங்கட்கும் மின்பிறப்பாக்கிகள், மூலப் பொருட்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்தல், வளச்சீராக்கிகளைப் பராமரித்தல் , துணைக்கருவிகட்கும்/மின்சார துணைக்கருவிகட்கும் பழுதுபார்த்தல்கள் ஆகியவையும், பொருட்கள் வழங்கலும், கொடுப்பனவுகளும்.

07. நாடு பூராவுமுள்ள சகல சாலைகளிலுள்ள இ.போ.ச பஸ்கட்கு தேவையான புதிய தயர்கள், பற்றிகள் ஆகியவற்றை அவற்றின் தேவைகட்கேற்ப பிராந்திய அலுவலகங்கள் ஊடாக வினியோகித்தல், உரிய பதிவேடுகளை முறையாகப் பேணல், கையிருப்பைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல், கொடுப்பனவுகளைக் கவனித்தல்.

08. இ.போ.ச சபைக்கு ஆண்டொன்றுக்குத் தேவையான பருவகாலச் சீட்டுக் கையிருப்பை அச்சிட்டு பேணல், அவற்றைத் தேவைக்கேற்ப சாலைகட்கு வினியோகித்தல், உரிய பதிவேடுகளைப் பேணல், கொடுப்பனவிற்குத் தேவையான உறுதிச் சீட்டுகளை (voucher) ஆயத்தஞ் செய்தல்.

09. இ.போ.ச ஊழியர்கட்கும் வெளியாருக்கும் வழங்குவதற்கான பயணச் செல்கைச் சீட்டுகளை அச்சிடுவதற்குத் தேவையான மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்தல், உரிய பதிவேடுகளைப் பேணல், கொடுப்பனவுகளைக் கவனித்தல்.

10. “யூடொங்” பஸ்கட்குத் தேவையான மாற்றுறுப்புகளையும் துணையுறுப்புகளையும் சீன வினியோகத்தர்களிடமிருந்து கொள்வனவு செய்தல், அத்தகைய பொருட்களை இலங்கை சுங்கப் பகுதியினால் சீர்ப்படுத்துவித்து தேவைக்கேற்றபடி அவற்றை வினியோகித்து கையிருப்புக் கட்டுப்பாட்டைப் பேணி உரிய கொடுப்பனவுகட்குத் தேவையான பதிவேடுகளைத் தயாரித்தல்.

11. இ.போ.ச சபையின் கீழுள்ள சுற்றுலா வங்களாக்களுக்கும் விடுதிகட்கும் தேவையான பொருட்கள் யாவற்றையும் கொள்வனவு செய்து வினியோகித்தலும் உரிய பட்டோலைகளையும் கோப்புகளையும் பேணலும்.

12. நாடு பூராவுமுள்ள சாரதிப் பயிற்சிப் பாடசாலைகட்குத் தேவையான வாகனங்களையம் இதர பொருட்களையும் தேவைக்கேற்றவாறு கொள்வனவு செய்தலும், உரிய கையிருப்பு பட்டோலைகளைப் பேணலும்.

13. வாகனக் கொள்வனவிற்கு (அலுவலக வாகனங்கள்) இதர உரிய பட்டோலைகளையம் கோப்புகளையும் பேணலும் உறுதிச்சீட்டுகளை ஆயத்தஞ் செய்தலும்.

14. அங்கீகரிக்கப்பட்ட கூறுவிலைகள் கேள்விப்பத்திர சபை வசம் இல்லாத வேலைகளில் அவசரத் தேவைகட்காக கூறுவிலைகள் கோரல், பட்டோலைகளை ஆயத்தஞ் செய்தலும் தழுவல் கேள்விப்பத்திர சபை அனுமதி பெறலும்.

15. சகல கொள்வனவுகளும் விடய வாரியாகவும் வேலைக்கள வாரியாகவும் உறுப்பு இலக்கங்களின் கீழ் வேறுபடுத்தப்பட்டு, கடமைகள் ஒப்படைக்கப்பட்டு, உரிய கடமைகளை ஊழியர்கள் நிறைவேற்ற வேண்டும்.

16. வினியோக கொள்வனவு விடயங்கள் யாவும் பின் அட்டையில் பதியப்பட்டு கிரமமாக கையிருப்பு கட்டுப்பாட்டில் இருத்தல் வேண்டும்.

17. வழங்கு உறுதிச்சீட்டு பதிவேடுகள் (S-1), வழங்கு உறுதிச்சீட்டுகள் (S-II) பெறும் உறுதிச்சீட்டுகள் (S-5 RV) வழங்கு உறுதிச்சீட்டுகள் (5-6) கட்டளைகளை உரிய முறையில் கணனிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

18. கேள்விப் பத்திர மூலம் சகல கொள்வனவுகட்கும் உரிய பதிவு செய்யப்பட்ட கூறுவிலைகள் கோரப்படும் போதும் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் போதும் கேள்விப் பத்திரங்கள் திறக்கும் குழுவின் அலுவலராக பங்கேற்க வேண்டும். சகல விலை கூறல்களும் பட்டியல் படுத்தப்பட்டு, விலைகட்கான அனுமதி பெறப்பட்டு கேள்விப்பத்திர சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

19. ஆண்டு கொள்வனவுத் திட்டம் ஆயத்தம் செய்யப்பட்டு கணக்காய்வு முகாமைத்துவக் குழுவினரும் பணிப்பாளர் சபையினதும் அனுமதிக்காக அனுப்பப்பட்டு அதன் பின்னர் உரிய முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

20. பிரதான களஞ்சியத்தின் நாளாந்த செயற்பாட்டை கண்காணித்து உரிய அறிவுறுத்துரைகளை வழங்கி, கையிருப்பிட்டு, நடைமுறைகளை அறிமுகப்படுத்தி அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

21. ஒளிப்படப் பிரதி இயந்திரங்கள், கணனிகள், மற்றும் இதர உபகரணங்கள் பழுதடையும் போது அவற்றை பழுதுபார்த்தலுக்கு அனுப்பி பேண வேண்டும்.

22. கேள்விப்பத்திர சபை நடவடிக்கைகள் யாவும் முற்றுப் பெற்ற பின்னர், கடிதங்களைத் தயார் செய்து , மதிப்பீட்டுக்குச் சமர்ப்பித்து மதிப்பீட்டறிக்கைகளைத் தயார் செய்ய வேண்டும்.

23. கழிவு செய்யப்பட்ட பஸ்கள், தயர்கள், பழைய புதினத் தாள்கள் அங்கீகரிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைக்கேற்ப விற்பனை செய்யப்பட்டு உரிய கூறுவிலைகள் நிரலிடப்பட்டு பொருத்தமான பட்டோலை தயாரிக்கப்பட வேண்டும்.

24. இறுதிக் கொடுப்பனவிற்காக கூறுவிலை பட்டியல்கள் யாவும் அனுப்பப்பட வேண்டும். அவற்றை பதிவு செய்ய வேண்டும்.

25. இ.போ.ச சகல சாலைகள், பிராந்திய வேலைக்களங்கள், பிராந்திய அலுவலகங்களிலுள்ள வினியோக அலுவல்கள், பண்டகசாலைக் காப்பாளரின் விவரங்கள் பேணப்பட வேண்டும். நியமங்கட்கான நேர்முகப் பரீட்சைகளில் பங்கேற்று இடமாற்றங்களுக்கு உரிய விதப்புரைகள் வழங்கி கண்காணித்தலும் வேண்டும்.

<u>பயிற்சி ஆராய்ச்சி அபிவிருத்திப் பகுதி</u>

தொ இல	விபரம்	பயிற்றப்பட்டவர் விவரம்	எண்ணிக்கை	செலவு (ருபா)
01	E.R.P கொழும்பு /கம்பஹா/ களுத்துறை	பி.பி.முகாமையாளர், பிராந்திய முகாமையாளர் (செயலாற்று/நிதி/தொழினுட்பம்), முகாமையாளர் (செயலாற்று/நிதி/தொழினுட்பம்), கணனி இயக்குநர்கள்	143	42,645/-
02	வயம்ப	பி.பி.முகாமையாளர், பிராந்திய முகாமையாளர் (செயலாற்று/நிதி/தொழினுட்பம்), முகாமையாளர் (செயலாற்று/நிதி/தொழினுட்பம்), கணனி இயக்குநர்கள்	59	பிராந்திய அலுவலகம் மூலம் நடாத்தப்பட்டது
03	றுகுண	பி.பி.முகாமையாளர், பிராந்திய முகாமையாளர் (செயலாற்று/நிதி/தொழினுட்பம்), முகாமையாளர் (செயலாற்று/நிதி/தொழினுட்பம்), கணனி இயக்குநர்கள்	62	பிராந்திய அலுவலகம் மூலம் நடாத்தப்பட்டது
04	கண்டி	பி.பி.முகாமையாளர், பிராந்திய முகாமையாளர் (செயலாற்று/நிதி/தொழினுட்பம்), முகாமையாளர் (செயலாற்று/நிதி/தொழினுட்பம்), கணனி இயக்குநர்கள்	57	பிராந்திய அலுவலகம் மூலம் நடாத்தப்பட்டது
05	பதுளை	பி.பி.முகாமையாளர், பிராந்திய முகாமையாளர் (செயலாற்று/நிதி/தொழினுட்பம்), முகாமையாளர் (செயலாற்று/நிதி/தொழினுட்பம்), கணனி இயக்குநர்கள்	36	பிராந்திய அலுவலகம் மூலம் நடாத்தப்பட்டது
06	சப்ரகமுவ	பி.பி.முகாமையாளர், பிராந்திய முகாமையாளர் (செயலாற்று/நிதி/தொழினுட்பம்), முகாமையாளர் (செயலாற்று/நிதி/தொழினுட்பம்), கணனி இயக்குநர்கள்	42	பிராந்திய அலுவலகம் மூலம் நடாத்தப்பட்டது
07	றஜரட்ட	பி.பி.முகாமையாளர், பிராந்திய முகாமையாளர் (செயலாற்று/நிதி/தொழினுட்பம்), முகாமையாளர் (செயலாற்று/நிதி/தொழினுட்பம்), கணனி இயக்குநர்கள்	30	பிராந்திய அலுவலகம் மூலம் நடாத்தப்பட்டது
08	வடக்கு	பி.பி.முகாமையாளர், பிராந்திய முகாமையாளர் (செயலாற்று/நிதி/தொழினுட்பம்), முகாமையாளர்	40	பிராந்திய அலுவலகம் மூலம் நடாத்தப்ப

		(செயலாற்று/நிதி/தொழினுட்பம்), கணனி இயக்குநர்கள்		ட்டது
09	களஞ்சியப் பொறுப்பாளர்	களஞ்சியக் காப்பாளர்கள் குழு - 1	80	32,685/-
		களஞ்சியக் காப்பாளர்கள் குழு - 2 -	80	35,555/-
10	தலைமைத்துவப் பயிற்சி மற்றும் முகாமைத்துவம்	அனைத்து சாலை முகாமையாளர்களும்	105	21,605/-
				20,409/-
				22,355/-
				20,090/-
				21,545/-
				18,110/-
				22,445/-
				19,557/-
				19,520/-
				21,820/-
				47,650/-
11	வீதிப் பாதுகாப்பு தொடர்பான பயிற்சி	சாரதிகள்	90	17,635/-
			90	19,995/-
12	ஆராய்ச்சி கருதுகோள்	உதவி முகாமையாளர் (நிதி)	43	19,197/-
		உதவி முகாமையாளர் (தொழினுட்பம்)	51	21,793/-
		உதவி முகாமையாளர் (செயலாற்று)	46	18,160/-
				462,771/-

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. சீஎபீ/ஏ/எஸ்எல்ரீபீ/எப்ஏ/01/2015/62

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2018 ஜுன் 20 திகதி

தலைவர்,
இலங்கை போக்குவரத்து சபை,

இலங்கை போக்குவரத்து சபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை போக்குவரத்து சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்து சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடத்தப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துதல் எனது பொறுப்பாகும்.

1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக் கூற்றில், அகல் விரிவான வருமானங்கள் மற்றும் செலவுகள் கூற்றில் மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் மூலகதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாக காணப்படுகின்றதா என்பதனை நிச்சயிக்க முடியாதுள்ளளேன்.

2. நிதிக் கூற்றுக்கள்

2.1 மறுப்பு அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 நிறுவனத்தின் இடையறாமல் நீடித்தல்

சபை தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்தமையால் தேறிய சொத்துக்கள் பாரிய அளவில் அரிப்புக்கு ஆளாகியிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டு இறுதி அளவில் தேறிய சொத்துக்கள் ரூபா 28,977,203,239 இற்கான மறை பெறுமதியொன்றாக இருந்தது. திறைசேரியின் அல்லது அரசின் நிதி உதவிகள் இன்றி நிறுவனத்தை இடையறாது நடாத்திச் செல்லல் தொடர்பாக நிச்சயமற்ற தன்மையொன்று ஏற்படக் கூடும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

பீளாய்வொன்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி நிலைமையை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலப்பகுதியில் நடைமுறைப் பொறுப்புக்களை மேவகை செய்வதற்காக காணப்படும் நடைமுறைச் சொத்துக்களின் தொகை மொத்த நடைமுறைப் பொறுப்புக்களில் 34 சதவீதத்தை விட மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் 2010 ஆண்டின் போது இம்மட்டம் 42 சதவீதமாக இருந்தது. செலுத்த வேண்டிய பணத்தை உரிய முறைப்படி செலுத்தாமை, அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்காமை மற்றும் நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் காணப்படும் மீதிகள் இந் நிலைமை ஏற்படுவதற்கு முக்கியமான காரணமாக இருந்துள்ளது.

2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

நியமத்தின் 32 ஆம் பந்தியின் பிரகாரம் நியமமொன்றின் மூலம் தேவைப்படும் மற்றும் அனுமதி வழங்கியுள்ள சந்தர்ப்பம் தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் வருமானங்கள் மற்றும் செலவுகளை எதிரீடு செய்யக் கூடாது எனினும் பின்வரும் எதிரீடு செய்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) சமர்ப்பித்திருந்த அட்டவணைகளின் பிரகாரம் 30 வங்கிக் கணக்குகளில் அனுகூலமான காசு மீதிகள் ரூபா 27,390,759 இனால் மேலதிகப்பற்று மீதிகளை எதிரீடு செய்திருத்தல் மற்றும் 14 வங்கிக் கணக்குகளில் மேலதிகப்பற்று மீதிகள் ரூபா 20,691,606 தொகை அனுகூலமான மீதிகளுடன் எதிரீடு செய்திருந்த காரணத்தினால் நிதிக்கூற்றுக்களில் வங்கி காசு மீதி மற்றும் வங்கி மேலதிகப்பற்று முறையே ரூபா 45,853,652 தொகை மற்றும் ரூபா 45,853,652 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ii) டிப்போக்கள் மற்றும் 3 பிராந்திய அலுவலகங்களில் கூட்டுத்தொகை ரூபா 649,233,033 தொகையான வியாபாரக் கடன்கொடுத்தோர் மீதிகளில் ரூபா 32,700,544 இற்கான கடன்கொடுத்தோர் வரவு மீதிகளை எதிரீடு செய்து நிதிக்கூற்றுக்களில் வியாபாரக் கடன்கொடுத்தோர் மீதி என ரூபா 616,532,489 தொகை காட்டப்பட்டிருந்தது.

(iii) கழுத்துறை சாரதிகள் பயிற்சி பாடசாலையின் ரூபா 12,657,758 தொகைக்கான வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் இருந்து ரூபா 46,080 இற்கான செலவு மீதியொன்றினை எதிரீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(iv) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 66,516,172 தொகையான மீதியிலிருந்து ரூபா 45,568,987 இற்கான வரவு மீதியொன்றினை எதிரீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 07

மீளாய்வாண்டிற்கான இலாபத்துடன் சீராக்கல் செய்யப்பட்டிருந்த ரூபா 120,428 ரூபா 120,428,954 இற்கான இருப்பு சீராக்கல் கணக்கின் மீதி மற்றும் ரூபா 42,471,837 தொகைக்கான எரிபொருள் மிகைகள் மற்றும் பற்றாக்குறைக் கணக்கின் மீதி காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு அல்லாத விடயங்களின் கீழ் சீராக்கல்கள் செய்திருக்கவில்லை.

(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நியமத்தின் 55 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களைப் பயன்படுத்தக் கூடிய நிலைமைக்கு ஆக்கிய சந்தர்ப்பம் முதல் ஆக்கபூர்வமான வாழ்க்கைக் காலம் பூராகவும் முறையான அடிப்படையில் பெறுமானத்தேய்வு கழிக்க வேண்டிய போதிலும் சபை மீளாய்வாண்டின் போது கைக்காசுக்கு மற்றும் லீஸின் அடிப்படையில் கொள்வனவு செய்து பயன்படுத்தியிருந்த ரூபா 51,541,669 தொகை பெறுமதியான ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்காக பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 58 ஆம் பந்தியின் பிரகாரம் காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியினை வெவ்வேறாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் வேறாக காட்டப்பட வேண்டுமெனினும் அதற்கு முரணாக நிதி நிலைமைக் கூற்றில் காணிகள் மற்றும் கட்டிடங்கள் என ரூபா 319,799,319 தொகை காட்டப்பட்டிருந்தது. அந்த மொத்தப் பெறுமதியில் 50 சதவீதம் அதாவது ரூபா 159,899,660 தொகை கட்டிடங்களின் பெறுமதி என கணித்து அப்

பெறுமதியின் மீது 2.5 சதவீதம் வருடாந்தப் பெறுமானத்தேய்வு கணிக்கப்பட்டிருந்தமையால் 2015 ஆண்டளவில் கட்டிடங்களின் கிரயத்தை மிகைத்து ரூபா 1,048,812 தொகை பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டிருந்தது.

(iii) நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக ஆக்கபூர்வமான வாழ்க்கைக் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 3,037,266,897 கிரயத்திற்கான 988 சொத்து விடயங்கள் முற்றாக பெறுமானத்தேய்வு மேற்கொண்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மதிப்பீட்டுத் தவறு இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) 2006 ஆண்டு முதல் கொள்வனவு செய்திருந்த ரூபா 1,004,452,160 தொகை பெறுமதியான 825 பஸ் வண்டி என்ஜின்கள் பஸ் வண்டிகளில் பொருத்தும் போது குறிப்பிட்ட பஸ் வண்டியின் பெறுமதியுடன் மூலதனப்படுத்தி வாழ்க்கைக் காலத்தை மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்பட வேண்டுமெனினும் அதற்கு முரணாக, கொள்வனவு செய்திருந்த பஸ் வண்டி என்ஜின்கள் வேறாக கணக்கீடு செய்யப்பட்டு 20% வீதம் பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 17

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நியமத்தின் 31(பீ) ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குத்தகை பொறுப்புக்கள் காட்டப்படும் போது அந்தக் குத்தகைச் சொத்துக்களின் நியாயமான பெறுமதி அல்லது செலுத்தப்பட வேண்டிய குத்தகைத் தவணைகளின் தற்போதைய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதி காட்டப்பட வேண்டியிருந்ததுடன், அதனை பின்வருமாறு வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்தது. அதற்கு முரணாக சபையினால் குத்தகை நிதிப் பெறுமதி மீது, வட்டித்தொகை தவணைத் தொகை கூட்டிய முறை (Sum of digit Method) மீது கணித்து ரூபா 10,032,569,943 தொகை குத்தகைப் பொறுப்பின் கீழ் காட்டப்படல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- காலப்பகுதி இறுதியில் உள்ளவாறு குறைந்த குத்தகை பெறுமதி மற்றும் அதனது பெறுமதியினை இணக்கஞ் செய்தல்.

- ஒரு வருடத்திற்கு குறைவில்லாத காலமொன்றிற்கு, வருடத்திற்கு மிகையான மற்றும் 05 வருடங்களை விட குறைவான மற்றும் 05 வருடங்களை விட கூடிய காலப்பகுதி தொடர்பாக கணக்கு காலப்பகுதி இறுதியில் காணப்பட்ட எதிர்கால குத்தகை தவணைகளின் கூட்டுத்தொகை மற்றும் அவற்றின் தற்போதைய பெறுமதியின் கூட்டுத்தொகை.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19

நியமத்தின் 57 ஆம் பந்தியின் பிரகாரம் பின்னைய ஊழியர் நலன்களின் பெறுப்புக்கள் எதிர்வு கூறிய அலகு செலவு முறைமை அடிப்படையாக பிழையற்ற மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் அவ்வாற செயற்படாமல் ஒவ்வொரு தரத்தில் மத்தியிலுள்ள சம்பளத்திற்காக வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் மேலதிகப் படி சேர்த்து உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையினால் பெருக்குவதன் மூலம் மொத்த பணிக்கொடை ஏற்பாட்டுத் தொகை கணிக்கப்பட்டிருந்தது.

2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு வங்கி இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் 09 டிப்போக்களின் வங்கி கணக்குகளுக்கு நேரடியாகப் பெறுவனவுகள் மற்றும் வங்கிக் கட்டணங்கள் முறையே ரூபா 36,612,935 தொகை மற்றும் ரூபா 2,629,593 தொகை வருமானங்கள் மற்றும் செலவுகள் என இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. 07 சந்தர்ப்பங்களில் காசேட்டில் இரண்டு முறை வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,973,578 தொகை சரிசெய்திருக்காததுடன் 40 சந்தர்ப்பங்களில் நேரடியாக செலவு வைத்தல், ரூபா 7,885,175 தொகை நீண்ட காலமாக தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கைக்காசு மற்றும் லீஸிங் முறையில் கொள்வனவு செய்திருந்த ரூபா 1,751,869,409 தொகை பெறுமதியான பஸ் வண்டிகளுக்காக ரூபா 201,247,403 தொகை பெறுமானத்தேய்வினைக் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) 2015 ஆண்டின் போது பணிக்கொடை கொடுப்பனவு ஒதுக்கும் போது இடைக் கொடுப்பனவு சம்பளங்கள் மற்றும் வேதனங்களுடன் கூட்டிய காரணத்தினால்

ரூபா 357,740,000 தொகை மிகையாக பணிக்கொடை ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 31,619,700 தொகை பெறுமதியான 900 இலக்றோனிக் டிக்கட் இயந்திரங்களை கொள்வனவு செய்து டிப்போக்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் டிப்போக்களின் சொத்துக்களின் கீழ் அவை ரூபா 28,863,689 தொகை என பதிவு செய்யப்பட்டிருந்தமையால் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களின் மீதி மற்றும் செலுத்த வேண்டிய தலைமை அலுவலகத்தின் நடைமுறைக் கணக்கின் மீதி ரூபா 2,756,002 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) கதிர்காமம் ஓய்வு விடுதியை அபிவிருத்தி செய்தல் 2015 ஜுலை 16 திகதி பூர்த்தி செய்திருந்த போதிலும் அதனது நிர்மாண வேலை கிரயமாகிய ரூபா 14,813,358 தொகை கட்டிடக் கணக்கிற்கு மூலதனப்படுத்தப்படாமல் நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக அந்த நாள் முதல் திசெம்பர் 31 திகதி வரை அக் கட்டிடத்திற்கான பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஊ) ஹொரவ்பத்தான புதிய டிப்போவின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2012 ஜுன் 10 திகதி முதல் சபையின் அலுவல்களுக்காக பயன்படுத்தியிருந்த போதிலும், அதனது நிர்மாண வேலைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 32,436,772 தொகை கட்டிடக் கணக்குகளுக்கு மூலதனப்படுத்தப்படாமல் நடைமுறை வேலை எனக் காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக இந்தக் கட்டிடங்களுக்காக கடந்த 3 1/2 வருடங்கள் தொடர்பாக ரூபா 2,838,218 தொகையான பெறுமானத்தேய்வு கணித்து கணக்கீடு செய்தல் நழுவியுள்ளது.

(எ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மத்திய பஸ் வண்டி அலுவலகத்தில் கூட்டுத்தொகை ரூபா 9,000,000 தொகைக்கான இரண்டு நிலையான வைப்புக்களக்காக கிடைத்திருந்த ரூபா 4,548,371 தொகை வட்டியினை மீண்டும் முதலீடு செய்திருந்த போதிலும் அப் பெறுமதினை முதலீட்டுக் கணக்கு வரவு வைப்பதற்கு பதிலாக பெற வேண்டிய வருமானக் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2015 ஜுன் 01 திகதி முதல் 2015 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான நிலையான வைப்பு ஒன்று தொடர்பாக பெற வேண்டிய வட்டி ரூபா 162,503 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) சிவில் பாதுகாப்புப் படையணிக்கு வழங்கியிருந்த அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக பெறவேண்டிய ரூபா 8,183,702 தொகையினை இரண்டு தடவைகள் ஆண்டிற்கான வருமானத்திற்கு மற்றும் பெறவேண்டிய வருமானங்கள் என கணக்கீடு செய்திருந்தமையால் அந்தப் பெறுமதியினால் ஆண்டிற்கான நட்டம் குறைவாகவும் மற்றும் பெற வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) மத்திய பஸ் வண்டி அலுவலகத்தில் 2015 ஆண்டு தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,726,367 இற்கான கடை வாடகை வருமானத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பாவனைக்கு உதவாத பஸ் வண்டிகளின் பெறுமதி ரூபா 1,592,669,139 தொகையாக இருந்ததுடன் பஸ் வண்டி ஒன்றின் கழிவுத் துண்டுப் பெறுமதி ரூபா 1,000 வீதம் இனங்கண்டிருந்த போதிலும் அந்த கழிவுத் துண்டுப் பெறுமதியினையும் மிகைத்து ரூபா 2,924,746 தொகை பெறுமானத்தேய்வு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்றின் பிரகாரம், ஆதனங்கள் பொறித்தொகுதிகள் உபகரணங்களின் பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 2,146,560,160 தொகையாக இருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் கீழ் பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 2,147,944,061 தொகை என காட்டப்பட்டுள்ளமையால் ரூபா 1,383,901 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையின் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 427 பஸ் வண்டிகளை விற்பனை செய்ததன் மூலம் ரூபா 60,759,000 இற்கான வருமானம் ஒன்று ஏனைய வருமானங்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் தொழிநுட்ப பிரிவின் தகவல்களின் பிரகாரம் 584 பஸ் வண்டிகளின் விற்பனை செய்ததன் மூலம் ரூபா 85,424,111 இற்கான வருமானம் ஒன்று கிடைத்திருந்ததென குறிப்பிட்டிருந்தமையால் நிதிக்கூற்றுக்களின் வருமானம்

மற்றும் தொழிநுட்ப பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் ரூபா 24,665,111 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) கழுத்துறை சாரதிகள் பயிற்சி பாடசாலையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதுளை டிப்போவில் இருந்து ரூபா 3,091,346 தொகை மற்றும் ஊவா, சப்ரகமுவ பிராந்திய அலுவலகத்தில் இருந்து மற்றும் கதிர்காமம் டிப்போவில் இருந்து கூட்டுத்தொகை ரூபா 6,756,442 தொகை பெற வேண்டிய மீதிகள் எனக் காட்டப்பட்டிருந்தது. எனினும் பதுளை டிப்போவின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய மீதி என ரூபா 2,871,970 தொகை மாத்திரம் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உடஹமுல்ல சாரதிகள் பயிற்சிப் பாடசாலையில் இருந்து தலைமை அலுவலத்திற்கு கிடைக்க வேண்டிய தொகை என ரூபா 1,033,171 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும் உடஹமுள்ள சாரதிகள் பயிற்சி பாடசாலையின் கணக்குகளின் பிரகாரம் தலைமை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய தொகை என ரூபா 570,834 தொகையாக இருந்தமையால் ரூபா 462,337 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

2.2.5 தொங்கல் கணக்கு

தொங்கல் கணக்கின் வரவு மற்றும் செலவு மீதிகளைச் சீராக்கல் செய்த பின்னர் ரூபா 3,941,993 தொகைக்கான செலவு மீதி நீண்ட காலம் முதல் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

2.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிராக காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் அவற்றை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

	கணக்கு விடயம்	பெறுமதி	சமர்ப்பிக்கப்படாத சான்று
		ரூபா	
(i)	வியாபாரக் கடன்கொடுத்தோர்	228,781,504	விரிவான அட்டவணை மற்றும் காலப்பகுப்பாய்வு
(ii)	வேலைத்தள கடன்கொடுத்தோர்	64,187,315	
(iii)	காசாளர் நிலுவை மீதி	1,271,364	
(iv)	நடத்துனர் ஒழுங்கீனங்கள்	15,249,736	
(v)	பலவின கடன்பட்டோர்	99,647,683	
(vi)	பெற வேண்டிய வருமானங்கள்	253,051,561	
(vii)	பணிக்கொடை கொடுப்பனவு	3,641,172,333	பணம் செலுத்திய உத்தியோகத்தர் தொடர்பான தகவல்கள்
(viii)	வியாபாரக் கடன்பட்டோர் மீதி	3,193,451	அட்டவணைகள்
(ix)	நடைமுறை கணக்கு, சேமிப்புக் கணக்கு மற்றும் நிலையான வைப்புக் கணக்கு	2,087,218,462	91 கணக்குகள் தொடர்பான மீதியினை உறுதிப்படுத்திய கடிதம்
(x)	காணிகள் மற்றும் கட்டிடங்கள்	319,799,318	சொத்துக்கள் பதிவேடு, விரிவான அட்டவணை மற்றும் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை
(xi)	நாட்குறிப்பு 06	5,016,723,610	நாட்குறிப்புக்கள் தொடர்பான விவரம்
(xii)	இருப்பு	744,821,576	விரிவான இருப்பு அறிக்கை
(xiii)	செயலாற்றுகை பிணைமுறி	1,312,727	விரிவான ஆவணங்கள்
(xiv)	ஹொரவப்பத்தான புதிய டிப்போ நிர்மாணித்தல்	4,548,536	மதிப்பீட்டுத் தொகையை மிகைத்ததற்கான அங்கீகாரக் கடிதம்
(xv)	பிரயாண அனுமதிப்பத்திர வருமானக் கழிவு	399,385,714	கழிவு அனுமதித்தற்கான ஆவணங்கள்
(xvi)	வங்கிக்கு செலவு வைக்கப்படாத மீதிகள்	2,843,042	செலவு மீதிகளின் காலப்பகுப்பாய்வு

(xvii)	காசோட்டிற்கு மிகையாக வரவு வைக்கப்பட்ட மீதிகள்	457,460	காலத்தை உறுதிப்படுத்தும் கடிதங்கள், விரிவான அட்டவணைகள்
(xviii)	வங்கி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டுள்ள வரவு வைக்கப்படாத காசோலைகள்	7,090,334	மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் விரிவான அட்டவணைகள்
(xix)	செயற்படாத கணக்குகள் - வரவு	9,935,375,095	காலப்பகுப்பாய்வு மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதங்கள்
(xx)	செயற்படாத கணக்குகள் - செலவு	26,054,948,782	காலப்பகுப்பாய்வு மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதங்கள்

2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஆண்டு முதல் 2009 ஆண்டு வரையான காலப்பகுதியில் பயங்கர விபத்துக்களின் மூலம் உயிரிழந்த ஊழியர்களுக்கு செலுத்திய சம்பளமாக கிரியுள்ள டிப்போவுக்கு ரூபா 1,569,519 தொகை மற்றும் அலவ்வ டிப்போவுக்கு ரூபா 2,174,792 தொகை திறைசேரியில் இருந்து கிடைக்க வேண்டியிருந்தது.

(ஆ) இலங்கை போக்குவரத்துச் சபையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம், தனியார் போக்குவரத்து அமைச்சு, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் தேசிய போக்குவரத்து மருத்துவ நிலையம் என்பவற்றில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் போது சபையினால் ரூபா 40,604,269 தொகை சம்பளம் மற்றும் படியாக செலுத்தப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31 திகதி அளவில் மேலும் ரூபா 36,922,769 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 5 பிராந்திய அலுவலகங்கள் தொடர்பாக வெளிசாராருக்கு செலுத்த வேண்டியிருந்த 10 வருடங்களை விட பழமையான கூட்டுத்தொகை

ரூபா 12,070,995 தொகையான மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) பதுளை டிப்போவில் 2011 ஆண்டு முதல் காணப்படும் நிலுவை காசாளர் மீதி ரூபா 33,662,732 தொகை மற்றும் மொனறாகாலை மற்றும் பதுளை டிப்போகளின் பெற வேண்டிய மீதிகள் முறையே ரூபா 9,260,302 தொகை ரூபா 8,455,334 தொகையினை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருந்த தகவல்களின் பிரகாரம் கொள்வனவு செய்தல் முற்பணக் கணக்கில் தீர்க்கப்படாத மீதிகள் தொடர்பான காலப்பகுப்பாய்வின் பிரகாரம் ரூபா 1,778,661,537 தொகை எனப்படும் 93 சதவீதம் 1 வருடங்களுக்கு முன்னரும் 38 சதவீதம் எனப்படும் ரூபா 721,380,174 தொகை 2 வருடங்களுக்கு முன்னரும் வழங்கியிருந்த முற்பணங்களாக காணப்பட்டதுடன் அவை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வங்கிக் கணக்கு ஒன்று தொடர்பாக பெற வேண்டிய வருமானங்களின் ரூபா 193,375,188 தொகை நிலுவையாகக் காணப்பட்டதுடன் அப் பணத்தில் சேமலாப நிதியக் கடன் கணக்கு தொடர்பாக பெற வேண்டிய மொத்தத் தொகையில் 81 சதவீதமாக காணப்பட்டதுடன் அதற்காக காலப்பகுப்பாய்வு ஒன்று சமர்ப்பித்திருக்கவில்லை.

(எ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய இராணுவ பிரயாண அனுமதிப்பத்திரம் மற்றும் விஷேட வாடகை வருமானம் முறையே ரூபா 41,784,537 தொகை மற்றும் ரூபா 188,616,652 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2008 ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31 திகதி வரை பெற வேண்டிய வருமானங்களின் கீழ் பண்டாரவலை டிப்போவின் மீதி ரூபா 1,108,756 இல் இருந்து ரூபா 12,537,456 தொகை வரை அதிகரித்துக் கொண்டு சென்றிருந்ததுடன் அதன் பிரகாரம் அறவீடு செய்யப்படாதவைகளின் விகிதாசாரம் 43 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையான வீச்சு ஒன்றில் காணப்பட்டது.

(ஐ) மத்திய பஸ் வண்டி அலுவலகத்தில் வாடகைக்கு கொடுத்துள்ள கடைகளுக்காக 2015 ஆண்டு தொடர்பாக பில் போடப்பட்ட மின்சாரம் மற்றும்

நீர் பில்பத்திரக் கட்டணங்கள் முறையே ரூபா 2,314,383 தொகை மற்றும் ரூபா 1,197,133 தொகைகளாகக் காணப்பட்டதுடன், குறிப்பிட்ட காலப்பகுதியில் பணமாக பெற்ற பெறுமதி ரூபா 1,816,471 தொகை மற்றும் ரூபா 866,601 தொகையினை மாத்திரம் கணக்கீடு செய்திருந்த காரணத்தினால் பெற வேண்டிய மீதிகள் மற்றும் வருமானம் ரூபா 828,443 தொகை என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மத்திய பஸ் வண்டி அலுவலகத்தில் நிலுவைக் கடை வாடகை வருமானம் என ரூபா 1,863,414 இற்கான தொகை ஒன்று 2009 ஆண்டு முதல் காணப்படுவதுடன் அத் தொகையை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டு இறுதி அளவிலும் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு	இணக்கமின்மைகள்
(அ) 1971 இன் 38 ஆம் நிதி அதிகாரச் சட்டத்தின் பிரிவு 11 மற்றும் 2003 ஜுன் 02 திகதிய இலக்கம் பீஈடி/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 8.2.2	மீளாய்வாண்டின் போது நிலையான வைப்புக்களில் ரூபா 19,733,819 தொகை முதலீடு செய்திருந்த போதிலும் அதற்காக நிதி அமைச்சரின் இணக்கத்தை மற்றும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தையும் பெற்றிருக்கவில்லை.
(ஆ) 1981 இன் 26 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் பிரிவு 16	சபையின் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களை சேர்ந்த ரூபா 1,662,003,377 இற்கான பங்களிப்புத் தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பியிருக்கவில்லை.
(இ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் பிரிவு 5(1) மற்றும் 1992	சேவை முடிவுற்று 30 நாட்களிட்குள் பணிக்கொடை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் 2015 மற்றும் அதற்கு

இன் 62 ஆம் இலக்க (திருத்திய) சட்டம்	முந்திய ஆண்டுகளின் போது ஓய்வு பெற்றிருந்த 5 டிப்போக்களைச் சேர்ந்த 172 ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 67,244,193 இற்கான பணிக்கொடைக் கொடுப்பனவு 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருடம் முதல் 19 வருடங்கள் வரையான வீச்சில் தாமதமொன்று ஏற்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
(ச) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை	
(i) நிதிப் பிரமாணம் 177(1)	பெறப்படும் பணம் நாளாந்தம் அல்லது கூடிய விரைவில் அனுப்பப்பட வேண்டிய போதிலும், பதுளை டிப்போவில் 2012 அண்டு முதல் 2015 வரை ரூபா 34,249,522 தொகையொன்று குறைவாக வங்கியில் இடப்பட்டிருந்ததுடன் டிப்போவினால் குறைவாக வைப்புச் செய்தல்களை இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
(ii) நிதிப் பிரமாணம் 177(3)	வலப்பனை மற்றும் தெல்தெனிய டிப்போக்களினால் 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது சேகரிக்கப்பட்டிருந்த போது ரூபா 1,214,386 இற்கான வருமானம் ஒன்றினை 2015 திசெம்பர் 31 வரை வங்கியில் இட்டிருக்கவில்லை.
(iii) நிதிப் பிரமாணம் 395(ஆ)	மீளாய்வாண்டின் போது சபையினால் பேணப்பட்டு வரும் 156 நடைமுறைக் கணக்குகளில் 59 நடைமுறைக் கணக்குகள் தொடர்பான வங்கி இணக்கக் கூற்றுக்கள் கணக்காய்வு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நிதிப் பிரமாணம் 395(உ)	தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 7 வங்கிக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 20,838,069 தொகைக்கான வழங்கியிருந்த ஆனால் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் மற்றும் வங்கிக் கணக்கு ஒன்றில் கூட்டுத்தொகை ரூபா 129,845 இற்கான வைப்புச் செய்திருந்த போதிலும் தேறப்படாத காசோலைகள் தொடர்பான அட்டவணை வங்கி இணக்கக் கூற்றுடன் சமர்ப்பித்திருக்கவில்லை.
(v) நிதிப் பிரமாணம் 396(ஈ)	மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் தொடர்பாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 95 வங்கி கணக்குகளில் 15 வங்கிக் கணக்குகளின் இணக்கக் கூற்றுக்களில் 06 மாதங்களை கடந்துள்ள வழங்கியிருந்த போதிலும் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத 58 காசோலைகளின் கூட்டுத்தொகை ரூபா 1,880,020 தொகை காணப்பட்டது. இந்த காசோலைகள் சுமார் 04 வருடங்கள் முதல் நீண்ட காலமாக காணப்பட்ட போதிலும் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
(vi) நிதிப் பிரமாணம் 395(ஏ)	அலுவலர்களுக்கு வேலைகள் சாட்டுதல் செய்யும் போது காசேடு தயாரிப்பதுடன் தொடர்பு இருக்காத நபர் ஒருவருக்கு வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கும் கருமம் சாட்டப்பட வேண்டுமெனினும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(vii) நிதிப் பிரமாணம் 757	மீளாய்வாண்டிற்காக பண்டக் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 11,633,840,656 தொகை பெறுமதியான ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் சபைக்கு சொந்தமாக இருந்த போதிலும் அனைத்து சொத்துக்களும் உள்ளடக்கக் கூடிய விதமாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று நாளது வரையாக பேணப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 751,260,743 இற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,228,021,529 தொகை ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 476,760,789 இனால் குறைவடைந்திருந்தது. சபையின் செயற்பாட்டு செலவுகள் ரூபா 4,566,344,326 இனால் மற்றும் நிர்வாகச் செலவுகள் ரூபா 1,612,418,157 இனால் அதிகரித்திருந்த போதிலும் வீதிப் பயணிகள் போக்குவரத்து வருமானம் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 7,045,280,367 இனால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய வீழ்ச்சி குறைவடைவதற்கு முக்கியமான காரணமாக இருந்துள்ளது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 வருடங்களில் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரை சபையின் பற்றாக்குறை படிப்படியாக அதிகரித்திருந்ததுடன் 2013 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை பற்றாக்குறை படிப்படியாக குறைந்திருந்தது. ஊழியர்களின் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வினை கவனத்தில் எடுத்த பின்னர் சபையின் பங்களிப்பு 2011 ஆண்டிற்கு ஒப்பாக 2012 ஆண்டின் போது அதிகரித்திருந்ததுடன் 2012 ஆண்டின் போது ரூபா 11,499,778,412 தொகையான பங்களிப்பு 2015 ஆண்டின் போது ரூபா 21,644,512,472 தொகை வரை இடையறாமல் வளர்ச்சியடைந்திருந்தது.

4. **செயற்பாட்டு மீளாய்வு**

4.1 **செயலாற்றுகை**

(அ) 2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்து சட்டத்தின் பிரகாரம் சபையின் குறிக்கோள்கள் பின்வருவனவாகும்.

- தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் உரிய மாகாண போக்குவரத்து அதிகாரசபையை வினவி பொருளாதார உறுதிப்பாட்டினை ஏற்படுத்தி வினைதிறனுள்ள மற்றும் ஆக்கபூர்வமான முறைசார் பஸ் சேவை ஒன்றினை வழங்குதல்.
- மேற்கூறிய குறிக்கோளினை நிறைவேற்றுவதற்காக சபையின் பிரேரணைகளை உற்படுத்தி மற்றும் செயற்படுத்துதலை மேற்கொள்ளப்பட வேண்டிய முறையினை இனங்கண்டு மற்றும் பல்வேறு திட்டங்களுக்காக பொறுப்புச் சொல்ல வேண்டிய உரிய செலுத்துனர்களை இனங்கண்டு மற்றும் மொத்தத் திட்டத்தினை செயற்படுத்தும் போது நேரிடக் கூடிய காலப்பகுதியினை குறிப்பிட்ட சபையினால் வருடாந்தத் திட்டமொன்று தயாரிக்க வேண்டும். அந்த வருடாந்த திட்டத்திற்கு உரிய பாதீடும் தயாரிக்கப்பட வேண்டும்.
- சபையின் செயற்பாட்டு விடயங்களை பலமுள்ள உச்சமட்டத்தில் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக அந்த செயற்பாட்டு அலுவல்கள் நடாத்தப்பட வேண்டிய முறைப்படி சபையின் அலுவல்களை நடாத்திச் செல்லல்.
- பொதுப் போக்குவரத்து சேவையின் தரம்சார் தன்மையின் அபிவிருத்தி செய்யும் விதத்தில் போக்குவரத்து துறையில் வேறு திட்டங்கள் அல்லது சேவைகளை செயற்படுத்துதல்.

  2015 ஆண்டிற்கான சபையின் குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பான கூட்டிணைந்த திட்டத்தின் படி தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத்திட்டம், முன்னேற்ற அறிக்கை மற்றும் பாதீட்டின் படி மீளாய்வாண்டிற்கான செயலாற்றுகை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்துச் சபை சட்டத்தின் பிரகாரம் சபைக்குரிய அதிகாரத்தின் பிரகாரம் செயற்படுத்தக் கூடிய பின்வரும் விடயங்கள் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கும் போது கவனம் செலுத்தியிருக்கவில்லை.

- வீதிய பயணிகளுக்காக பஸ் தரிப்பிடங்களும் மறைப்புக்களும் வழங்குதல்

- நடைமுறைச் சாத்தியமற்ற மற்றும் கடினமானவை என சபையினால் கவனம் செலுத்திய பாதைகளில் போதியளவு பஸ் சேவைகள் வழங்குவதற்கு முயற்சி செய்தல்.
- சபைக்கு சொந்தமான பஸ் தரிப்பிடங்களை வழங்குதல் மற்றும் பேணல்.

(ஆ) 2015 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் போது நெருங்குவதற்கு எதிர்ப்பாரத்துள்ள இலக்குகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நாளாந்தம் ஓடக்கூடிய பஸ் வண்டிகளின் எண்ணிக்கையை 6000 வரை அதிகரிப்பதற்கு இலக்கு வைத்திருந்த போதிலும் திட்டப் பகுதியின் அறிக்கையின் பிரகாரம் நாளாந்த ஓடியிருந்தது 5270 பஸ் வண்டிகள் மாத்திரமே. அதன் பிரகாரம் 12 சதவீத இலக்கினை நெருங்குவதற்கு இயலாதிருந்துள்ளது.

(ii) 2015 ஆண்டின் போது ஓட்டுவதற்கு எதிர்பார்த்திருந்த கிலோ மீற்றர்கள் எண்ணிக்கை 643,184,516 தொகை எனினும் 440,424,544 கிலோ மீற்றர்கள் மாத்திரமே ஓடியிருந்தது. அதன் பிரகாரம் இலக்கிடப்பட்ட கிலோ மீற்றர் எண்ணிக்கையில் 202,759,972 தொகை எனப்படும் 31.5 சதவீதத் தொகை ஓட்டுவதற்கு முடியாதிருந்தது.

(iii) நாளாந்த பாதை பதிவேட்டு வருமாம் ரூபா 80 மில்லியன் தொகை வரை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 66 மில்லியன் தொகை வருமானம் மாத்திரம் பெறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இலக்கிடப்பட்ட தொகையில் 17.5 இற்கான சதவீத நாளாந்த வருமானம் ஒன்றினைப் பெற்றிருக்கவில்லை.

(இ) முற்றாக பழுதுபார்க்க வேண்டிய பஸ் வண்டிகள் மற்றும் நாளாந்தம் ஏற்படுகின்ற சிறிய அளவினை பழுதுபார்த்தல்கள் காரணத்தினால் ஓட்டத்தில் இருந்து வெளியேற்றப்படும் பஸ் வண்டிகளைப் பழுதுபார்த்து ஓட்ட நிலைக்கு சேர்த்தல் இலக்காக இருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட மொத்த பஸ் வண்டித் தொகுதி 7,797 எனினும் பின்வரும் காரணங்களினால் அந்தப் பஸ் தொகுதியில் பஸ் வண்டிகள் 1,511 தொகை எனப்படும் சுமார் 20 சதவீதம் ஓட்டுவதற்கு இயலாத நிலைமையில் காணப்பட்டது.

விபரம்	ஓடப்படாத பஸ் வண்டிகளின் எண்ணிக்கை
டயர், டியூப் மற்றும் பட்டரி இன்மையால் நிறுத்தப்பட்ட பஸ் வண்டிகள்	169
தொகுதிகள், உப தொகுதிகள் இன்மையால் நிறுத்தப்பட்ட பஸ் வண்டிகள்	400
பரிசோதனை நடைபெற்றுக் கொண்டிருக்கும் பஸ் வண்டிகள்	90
அவசர விபத்துக்கள் காரணமாக பழுதுபார்த்தலில் காணப்படும் பஸ் வண்டிகள்	77
ஓடும் போது ஏற்படும் சிறிய தொழிநுட்ப கோளாறுகள் காரணமாகப் பழுதுபார்த்தலில் காணப்படும் பஸ் வண்டிகள்	261
தொகுதிகள் பழுதுபார்த்தலில் காணப்படும் பஸ் வண்டிகள்	226
பாரிய பழுதுபார்த்தல் வேலைக்காக நிறுத்தப்பட்டுள்ள பஸ் வண்டிகள்	260
பழுதுபார்த்தலின் மூலம் பொருளாதார நலன் கிடைக்காத பஸ் வண்டிகள்	28
மொத்தக் கூட்டுத்தொகை	1511

பஸ் வண்டிகளில் 569 தொகை டயர், டியூப் மற்றும் தொகுதிகள் இன்மையினால் ஓடுவதில் ஈடுபடுத்தியிருக்கவில்லை. அதே போல் அந்த பஸ் வண்டித் தொகுதியில் 778 தொகை 15 வருடங்களை விடப் பழமையான பஸ் வண்டிகளாகும்.

(ஈ) பஸ் வண்டிகளை புனர்நிர்மாணம் செய்து வாகனத் தொகுதியில் சேர்க்கும் செயற்திட்டத்திற்காக 2015 ஆண்டிற்காக ரூபா 880 மில்லியன் தொகை சபையினால் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2015 ஆண்டின் போது ரூபா 1037.12 மில்லியன் தொகை திறைசேரியில் இருந்து கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் சபையினால் அந்த முழுத்தொகை ஆகிய ரூபா 1,917.12 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் சபையின் திட்டமிடல் பகுதியின் அறிக்கையின் பிரகாரம் புனர்நிர்மாணம் செய்வதற்கு இலக்காக இருந்த 861 பஸ் வண்டிகள் எனப்படும் 48 சதவீதம் புனர்நிர்மாணம் செய்வதற்கு இயலாதிருந்துள்ளது.

எதிர்பார்த்த இலக்கினை நெருங்குதல் தொடர்பான விரிவான தகவல்கள் கீழே காணப்படுகின்றது.

விவரம்	இலக்கு	உள்ளவாறு நிலைமை	நெருங்க இயலாது போன எண்ணிக்கை
	2015 ஆண்டு		
என்ஜின் தொகுதிகள்	720	500	220
ஜியர் பெட்டி	720	173	547
பஸ் போர்ட்	360	266	94
கூட்டுத்தொகை	1800	939	861

4.2 முகாமைத்துவத் தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான 127 ஏக்கர் காணி வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்களினால் அனுபவிக்கப்பட்டு வருவதுடன் அந்த காணிகளை திருப்பி பெறுவதற்காக, சட்டரீதியாக சாட்டுவதற்கு அல்லது விற்பனை செய்வதற்காக முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள 18 ஏக்கர் காணி சபையினால் நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு காணப்பட்ட போதிலும் அதற்காக காணி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பெற்றுக்கொள்ள வேண்டிய கொடுப்பனவு விடுதலைப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக கணக்காய்வுத் திகதியாகிய 2017 செப்டம்பர் 15 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 1966 ஜுலை 26 முதல் குத்தகை அடிப்படையில் பெற்றிருந்த கொழும்பு 5, பூந்தோட்ட வீதியில் அமைந்துள்ள 3.4125 ஹெக்டயருக்கான அன்டஸன் கொல்ப் லின்க்ஸ் திடல், சாலிகா மண்டபம் மற்றும் விளையாட்டுத் திடலுக்குரிய காணி மற்றும் கட்டிடம் ரூபா 300,000 இற்கான பெறுமதி என நிதிக்கூற்றுக்களில் காணி கட்டிடங்களின் கீழ் காட்டியிருந்த போதிலும் அந்த காணியின் சட்டரீதியான உரிமையை சபை பெற்றிருக்கவில்லை. 2009 பெப்ரவரி 18 அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் இந்த காணிக்காக கொடுப்பனவு

விடுதலைப் பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக பிரதேச செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2017 செப்டம்பர் 15 அளவிலும் கொடுப்பனவு விடுதலைப் பத்திரம் பெற்றிருக்கவில்லை.

(ஈ) 2004 செப்டம்பர் 15 திகதிய இலக்கம் அமப/04/1196/023/015-1 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான மஹரகம தெஹிவளை பாதையில் அமைந்துள்ள 9167 இலக்க ஆரம்ப வரைபில் காட்டப்பட்டுள்ள தகனம் கலே வத்தை 160.2 பர்சஸ் காணி (ஹெக்டயர் 0.4055) 2004 நவம்பர் 09 திகதி சபையின் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்தக் காணி 2016 பெப்ரவரி மாதத்தில் ரூபா 112,000,000 இற்காக அரச பெறுமதி மதிப்பீட்டாளரினால் பெறுமதி மதிப்பீடு செய்திருந்ததுடன் 2017 செப்டம்பர் 15 கணக்காய்வுத் திகதி அளவிலும் இந்தப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) 1957 இன் 48 ஆம் இலக்க மோட்டார் வாகனம் போக்குவரத்து சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்ட இலக்கம் 175, காலி வீதி இரத்மலான இல் அமைந்துள்ள 26.5 பர்சஸ் இற்கான காணி இரத்மலான பிரதேச செயலகம் அமைப்பதற்காக அரசாங்க அதிபருக்கு வழங்கியிருந்த போதிலும் இந்த காணியை பெறுமதி மதிப்பீடு செய்து பணம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போக்களுக்குத் தேவையான உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்யும் போது தலைமை அலுவலகத்தில் இருந்து வழங்குனர்கள் தெரிவு செய்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் வழங்குனர்களின் டிப்போக்களுக்கு நேரடியாகஉதிரிப்பாகங்கள் வழங்கப்பட்டிருந்தது. எனினும் டிப்போவினால் உரிய இன்வொயிஸ் பத்திரங்கள் மற்றும் பண்டங்கள் கிடைக்கப்பட்டதற்கான சான்றிதழ்கள் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக தலைமை அலுவலகத்தின் கொள்வனவு முற்பணக் கணக்கில் 2014 திசெம்பர 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,831,859,235 தொகையான தீர்க்கப்படாத முற்பணங்கள் மீதி 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,907,294,471 வரை அதிகரித்திருந்தது. பண்டங்கள் கிடைத்த பின்னர் பணம் செலுத்தப்பட வேண்டுமெனினும் அதற்கு முரணாக உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்யும் போது செயற்பட்டிருந்தமை முற்பண மீதி அதிகரித்திருந்ததற்கான காரணமாக உள்ளது.

(எ) மத்திய பஸ் வண்டி அலுவலகத்திலுள்ள 58 கடைகளில் 09 இற்கு மாத்திரம் 2015 திசெம்பர் 31 திகதி அளவில் வாடகை உடன்படிக்கைகள் செல்லுபடியான நிலைமையில் காணப்பட்டதுடன் மீதியான 49 உடன்படிக்கைகளில் வாடகை உடன்படிக்கைகள் காலங்கடந்தவையாக காணப்பட்டன. அவற்றில் சில உடன்படிக்கைகள் 1970 ஆண்டு முதல் காணப்படுகின்றது எனவும் அந்த வாடகை உடன்படிக்கைகளை இற்றைவரைப்படுத்துவதற்காக உரிய பகுதியினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஏ) மத்திய பஸ் வண்டி அலுவலகத்தினால் வாடகைக்குக் கொடுத்துள்ள கடைகளுக்காக உப நீர்மானிகள் மற்றும் உப மின்சாரமானிகள் பொருத்தப்பட்டு நீர் மற்றும் மின்சாரம் வழங்கப்பட்டு 2015 ஆண்டிற்கான சிட்டையிடப்பட்டு அறவிடப்பட்ட தொகை முறையே ரூபா 1,197,133 தொகை மற்றும் ரூபா 2,314,394 தொகை எனினும் மத்திய பஸ் வண்டி அலுவலகத்தினால் நீர் மற்றும் மின்சாரம் என்பவற்றிற்காக ரூபா 7,130,972 தொகை மற்றும் ரூபா 7,975,010 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மத்திய பஸ் வண்டி அலுவலகத்தினால் நீர் மற்றும் மின்சாரத்திற்காக ரூபா 5,933,839 தொகை மற்றும் ரூபா 5,660,616 தொகை மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது. இங்கு நுகர்வு செய்யும் மின்சாரம் மற்றும் நீர் அலகுகள் அதிகரிக்கும் போது அதனது ரேட்டும் அதிகரிக்கின்றமையால் மத்திய பஸ் வண்டி அலுவலகத்தினால் கூடிய தொகையொன்று செலுத்த நேரிடுகின்றதுடன் கடை வாடகையாளரிடம் மின்சாரம் மற்றும் நீர் சிட்டைகளுக்காக அறவீடு செய்யும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் குறைந்த ரேட் அறவீடு செய்தல் இந்த நிலைமைக்கு காரணமாகியிருந்தது என அவதானிக்கப்பட்டது.

4.3 செயற்பாட்டு தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஊழியர் நலன்புரி விடயங்களுக்காக ஊழியர் தண்டப் பணக் கணக்கில் ஊழியர்களுக்கு வழங்கியிருந்த கடன்கள் தொடர்பாக அறவிடப்பட்டிருந்த ரூபா 84,733,235 இற்கான கடன் தவணைப்பணம் உரிய நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் ஊழியர் சேமலாப நிதியில் இருந்து ஊழியர்களுக்கு வழங்கியிருந்த கடனுக்காக ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து கழித்திருந்த தவணைப் பணம்

ரூபா 249,486,944 தொகை உரிய நிதியத்திற்கு செலுத்தப்படாமல் சபையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. சபையின் சேமலாப நிதியம் தற்போது முடிவுறுத்தப்பட்டிருந்தமையால் அந்தப் பணத்தை தீர்க்கும் முறை தொடர்பாக தகவல்கள் கணக்காய்வின் போது சிக்கல் தன்மையுடன் காணப்பட்டது.

(இ) கதிர்காமம் ஓய்வு விடுதியின் 02 ஆம் கட்டட நிர்மாண வேலைக்காக ரூபா 7,912,368 தொகை செலுத்தியிருந்த போது 2013 ஜுன் 20 திகதி ஒப்பந்தக்காரர் நிர்மாண வேலையை இடைநிறுத்தியிருந்தார். இதன் காரணமாக சபைக்கு நேரிட்டுள்ள நட்டத்தினை குறைப்பதற்காக ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 658,351 இற்கான செயலாற்றுகை பிணை முறியினை செல்லுபடியாகும் காலம் முடிவடைய முன் காசாக்காமை தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களிடம் அந்த நட்டத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2008 ஜனவரி 25 திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் மற்றும் 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் வாகனங்களின் சேவை அலுவல்கள் செய்யும் அனைத்து டிப்போக்களினாலும் அது தொடர்பாக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும் அது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 6 பிராந்தியங்களில் 07 டிப்போக்கள் மாத்திரம் இந்த அனுமதிப்பத்திரம் பெற்றிருந்தததுடன் 35 டிப்போக்கள் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.

4.4 தோற்றக்கூடிய ஒழுங்கீனங்கள்

2012 முதல் 2015 ஆண்டு வரை இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் செய்தமான டிப்போக்களுக்காக நெப்கோ பேரின் கீழ் உற்பத்தி செய்யப்பட்டுள்ள வில் தகடுகள் வழங்குவதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பணம் செலுத்திய போது நிதிப்பிரமாணங்கள் 137 மற்றும் 138 இன் பிரகாரம் வில்தகடு பெற்றதனை உறுதிப்படுத்திக் கொள்ளாமல் நெப்கோ கம்பனியில் இருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தை அடிப்படையாக வைத்து சபையினால் ரூபா 127,150,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 திகதி வரை வழங்குனர் உரிய வில் தகடுகளை வழங்கியிருக்கவில்லை.

4.5 **இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாரியபொல மற்றும் மாஹோ டிப்போக்களினால் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு குறிப்பிட்டுள்ளவாறு கொடுப்பனவு செய்யப்படாமையினால் 2015 ஆண்டின் போது ரூபா 2,718,706 இற்கான தொகை மிகைவிதிப்பாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு முறையே செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 5,291,223,198 தொகை மற்றும் ரூபா 52,065,963 உரிய தினத்தில் அனுப்பப்படாமையினால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 124,276,193 தொகை மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 11,458,689 தொகை மிகை விதிப்பாக செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது தலைமை அலுவலகத்திற்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலவு செய்யப்பட வேண்டிய ரூபா 45,491,197 இற்கு பங்களிப்புத் தொகைக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் ரூபா 12,728,496 இற்கான மிகைவிதிப்புத் தொகையொன்று ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் பிரகாரம் சபையினால் செலுத்த வேண்டியயிருந்ததென அவதானிக்கப்பட்டது.

4.6 **வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த சபையின் சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 பந்தியின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான வளங்கள் வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கக் கூடாதெனினும் சபையின் பாதுகாப்பு பகுதியை சேர்ந்த உத்தியோகத்தர்களை மற்றும் வாகனங்களை போக்குவரத்து அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்தது. இங்கு போக்குவரத்து அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு பகுதியின் ஊழியர்களுக்கான சம்பளங்கள் மற்றும் படியாக 2015 ஆண்டிற்காக சபையினால் ரூபா 4,723,789 தொகையும் மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றிருந்த 03 வாகனங்கள் போக்குவரத்து அமைச்சுக்கு மற்றும் பிரதிப் போக்குவரத்து அமைச்சு அலுவலகங்களுக்கு ஆகியவற்றுக்கு விடுவிக்கப்பட்டு அதற்கான எரிபொருள் செலவுகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 3

மோட்டார் வாகனங்களுக்கான வாடகையாக ரூபா 356,852 தொகை மற்றும் சாரதிகளின் சம்பளம் மற்றும் மேலதிக நேரப்படியாக ரூபா 393,392 தொகையும் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

4.7 **சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2002 ஆண்டின் போது ரூபா 97,462,160 கிரயத்திற்கு 143 பஸ் வண்டிகளை புனர்நிர்மாணம் செய்வதற்காக வெஸ்கோ நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. எனினும் வெஸ்கோ நிறுவனம் தற்போது செயற்படு நிலைமையில் காணப்படாமையினால் உரிய பஸ் வண்டிகளை மீண்டும் சபைக்கு பெற்றுக்கொள்ளல் தொடர்பாக ஆபத்து நிலைமை ஒன்று காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் இது தொடர்பாக போதியளவு வெளிப்படுத்தல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் தகவல்களின் பிரகாரம் 2010 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர் பங்களிப்புத் தொகையாக ரூபா 3,695,712,194 தொகை ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து அறவிடப்பட்டிருந்த போதிலும் அப்பணம் உரிய முறையில் சபையினால் பேணப்படும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பாமையால் குறிப்பிட்ட காலத்திற்காக கிடைக்க வேண்டிய வட்டித் தொகையினை ஊழியர்கள் இழந்துள்ளனர்.

4.8 **பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜுன் 02 திகதிய பீஈம/12 இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் 9வது அத்தியாயத்திற்கு இணங்க பிரகாரம் இலங்கை போக்குவரத்து சபைக்காக அமைப்பு வரைபடமொன்று, ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பதவியுயர்வு நடைமுறை என்பன தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

(ஆ) சபையின் டிப்போக்களில் சாரதிப் பதவிகளில் 28 சதவீதம் மிகை ஒன்று முதல் 35 சதவீதம் வரை பற்றாக்குறை வரையான வீச்சில் பரவி இருந்ததுடன்

நடத்துனர் பதவிகளில் 51 சதவீதம் மிகையொன்று முதல் 36 சதவீதம் வரை பற்றாக்குறையினால் பரவிக் காணப்பட்டது. எவ்வாறாயினும் நடத்துனர்கள் மற்றும் சாரதிகள் பதவிகள் மிகையாகக் காணப்பட்ட 25 டிப்போக்கள் காணப்பட்டதுடன் அந்த மிகை பதவியணியினர் சாரதிகள் மற்றும் நடத்துனர் பற்றாக்குறையாக இருக்கும் டிப்போக்களுக்கு இணைத்து சாரதிகள் மற்றும் நடத்துனர் பற்றாக்குறையினை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போல் 2015 மே 01 திகதியில் உள்ளவாறு பதவியணியினர் தொடர்பாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் 235 சாரதி ஊழியர்கள் மற்றும் 528 நடத்துனர் ஊழியர்கள் பொருத்தமற்ற கருமங்களில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்பித்தல்

2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட வேண்டுமெனினும் 2015 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 01 வருடம் 05 மாதங்கள் தாமதித்து 2017 ஜூலை 19 திகதியே கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்தது.

5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 பந்தியின் பிரகாரம் திட்டமிடப்பட்ட காலப்பகுதியில் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை நெருங்கக் கூடிய விதமாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்களை தெளிவாக இனங்கண்டு செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனினும் சமர்பிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் சபையின் நிதி நிலைமையைக் கவனத்தில் எடுக்காமல் நெருங்க முடியாத குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை உட்படுத்தி தயாரிக்கப்பட்டிருந்தது.

5.3 பெறுகைகள் திட்டம்

2006 அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4.2 பிரிவின் பிரகாரம் சபையினால் பிரதான பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரித்திருந்த போதிலும், 4.2.1(ஆ) இன் பிரகாரம்

குறைந்த பட்சம் 3 வருட காலத்திற்காக எதிர்பார்க்கும் பெறுகைகள் அலுவல்கள் பிரதான பெறுகைகள் திட்டத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டிருக்க வேண்டுமெனினும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரதான பெறுகைகள் திட்டம் அவ்வாறு தயாரித்திருக்கவில்லை.

5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை போக்குவரத்து சபையினால் 2015 ஆண்டிற்காக தயாரித்திருந்த பாதீட்டின் காணப்பட்ட தகவல்கள் மற்றும் 2015 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற தகவல்களை இணக்கஞ் செய்யக்கூடிய விதமாக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் சபையினால் பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள் மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் இடையே முரண்கள் காணப்படுகின்றனவா என மற்றும் அவை நிறுவனத்தின் நிதி அலுவல்களை கட்டுப்படுத்துவதற்காக கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) கணக்காய்வின் போது இணக்கஞ் செய்யக்கூடியதாக இருந்த செலவுகளை பரிசோதனை செய்த போது சபையின் 19 செலவு விடயங்களில் பாதீட்டு பெறுமதி மற்றும் உள்ளவாறான பெறுமதியிடையே 4 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டது.

(இ) சபையின் பாதீட்டு மொத்த வருமானம் ரூபா 44,417,885,626 தொகையாக காணப்பட்டதுடன் உள்ளவாறான மொத்த வருமானம் ரூபா 39,828,386,904 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 4,589,498,722 எனப்படும் 10.34 சதவீதத்திற்கான பிரதிகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

5.5 சுற்றாடல்சார் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

2008 ஜனவரி 25 திகதிய 1533/16 இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம், 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல்சார் சட்டத்தின் பிரிவு 23 இன் பிரகாரம் மாசடைவதற்கு வழிவகுத்து சுற்றுச்சூழலுக்கு கழிவுப் பொருட்களை வெளிப்படுத்துதல், வைப்புச் செய்தல் அல்லது வெளியேற்றுதல் ஆகிய அனைத்து அலுவல்களுக்குமாக மேற்கூறிய பிரிவின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் ஒன்று பெறப்பட வேண்டும். இந்த வர்த்தமானியின் பிரகாரம் இலங்கையில் பயன்படுத்தப்படும் அனைத்து மோட்டார் வாகனமும் வாயுப் புகை

பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு இணக்கச் சான்றிதழ் ஒன்று பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் கட்டளை 9 இன் பிரகாரம் மோட்டார் வாகனம் ஒன்றில் பஸ் வண்டிகளும் உட்படுத்தப்பட்டிருந்ததாக குறிப்பிட்டுள்ளமையால் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகளுக்காகவும் புகை பரிசோதனைச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனினும் 10 பிராந்திய அலுவலகளின் தகவல்களின் பிரகாரம் 2015 ஆண்டின் போது மொத்த எண்ணிக்கையான 6729 பஸ் வண்டிகளில் 550 பஸ் வண்டி பத்திர புகைப் பரிசோதனைச் சான்றிதழ் பெற்றிருந்தது. அதன் பிரகாரம் மொத்த பஸ் வண்டிகளின் எண்ணிக்கையில் 92 சதவீதம் புகைப் பரிசோதனைச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமல் ஓட்டப்படுவதினால் அரச நிறுவனங்களின் மூலம் பாரிய சுற்றாடல் மாசடைதல் ஒன்று மற்றும் சுற்றுச்சூழல் சட்டங்கள் பிரமாணங்களுடன் சேதங்களுக்கு இணக்கமின்மை ஒன்று நிகழ்ந்துள்ளது.

6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

	முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள்		அவதானிப்புக்கள்
(அ)	நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு	(i)	சபையின் பஸ் வண்டிகளின் விபரங்கள் அடங்கிய பதிவேடு ஒன்று பேணப்படாமை.
		(ii)	சொத்துக்கள் கொள்வனவு செய்தல் மற்றும் கணக்கீடு செய்வதில் உள்ளகக் கட்டுப்பாடு பலவீனமாகக் காணப்படல்
		(iii)	வருடாந்த சொத்துக்கள் மெய்மையாய்தல் ஒன்று மேற்கொள்ளப்படாமை.
(ஆ)	நிதிக் கட்டுப்பாடு	(i)	பெறவேண்டிய பணத்தை விரைவாக சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் செலுத்த வேண்டிய பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை.

	(ii)	சரியான முறையில் வங்கி இணக்கக் கூற்றுத் தயாரிக்காமை.
	(iii)	முற்பணப் பேரேடு பேணப்பட்டிருக்காமை
	(iv)	ஊழியர் பிணை வைப்புக்களுக்காக பதிவேடு பேணப்படாமை மற்றும் ஊழியர் பிணை வைப்புக்களை சபையின் செலவுகளுக்காக பயன்படுத்தல்.
	(v)	நிதிப் பிரிவினால் தேவை ஒன்றின்றி வங்கி நடைமுறைக் கணக்குகள் பேணல், மாதாந்தம் இணக்கம் செய்யாமை மற்றும் சீராக்கல் மேற்கொள்ளாமை.
(இ) முற்பணங்கள் தீர்த்தல்	(i)	பெற்றுக்கொண்ட முற்பணங்கள் குறிப்பிட்ட கருமம் முடிவடைந்ததுடனேயே தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை.
	(ii)	காலத்திற்குக் காலம் இணக்கம் செய்தல் மற்றும் தீர்த்தல் செய்யப்படாமை
(ஈ) வருமானம் நிருவாகம்		பிரயாண அனுமதிப்பத்திர வருமானத்தை சேகரிப்பதற்காக தொடர் இலக்கத்துடனான அச்சிடப்பட்ட இன்வொயிஸ்கள் பயன்படுத்தாமை.
(உ) களஞ்சியக் கட்டுப்பாடு	(i)	தலைமை அலுவலகத்திலிருந்து கட்டளையிடப்பட்ட வழங்குனர்களினால் டிப்போக்களுக்கு நேரடியாக வழங்கியிருந்த பண்டங்கள் தொடர்பாக தகவல்கள் தலைமை அலுவலகத்திற்கு அறிவிக்காமை மற்றும் இணக்கங்கள் மேற்கொள்ளப்படாமை.
	(ii)	பரிசோதனை மேற்கொள்ளாமல் பண்டங்கள் ஏற்றுக்கொள்ளல்.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச். எம். காமினி விஜேசிங்ஹ

கணக்காய்வாளர் தலைமை அதிபதி